# காஞ்சி

20 காசு

27-7-69 நிறுவனர்: அண்ணாதுரை

6-2



28.7.69.

விண்வெளி வீரர்கள்: ஆர்ம்ஸ்ட்ராங், காலின்ஸ், ஆல்டிரின்

# கேட்டீரா சேதி!

ரஷ்ய நாடு, அமெரிக்காவை முந்திக்கொண்டு, சந்திர மண்டலத்துக்கு லூனா—15 என்ற கலத்தை அனுப்பி இருந்தது. லூனா—15 பற்றி ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு விதமான தகவல்களைத் தந்து கொண்டிருந்தன. சிலர், அப்பாலோ—11க்கு இது கேடுண்டாக்கும்; இடையூறு விளைவிக்கும் என்றனர்கள். சிலர், அப்பாலோ—11ன் பாதையிலேயே லூனா 15 குறுக்கிடாது என்றனர்கள். சிலர், அமெரிக்காவை முந்திக்கொண்டு, சந்திர மண்டல மண் மாதிரிகளைக் கொண்டுவரும் என்றனர்கள். இப்போது அப்பாலோ-11-ம் பூமிக்குத் திரும்பிவிட்டது. லூனா—15 பற்றிய செய்தி மட்டும் வியப்பினைத் தந்து கொண்டிருக்கிறது. சந்திரனை இது 50க்கும் அதிகமான முறை சுற்றிக் கொண்டிருந்துவிட்டு, இப்போது, 'ஈகிள்' கலம் இறங்கி இருந்த இடத்திற்கு 500 மைல் தொலைவில், நெருக்கடிக் கடல் என்ற இடத்தில் இறங்கிவிட்டதாகத் தெரிகிறது. சில ஆராய்ச்சியாளர்கள், லூனா-15 தரையில் பத்திரமாக இறங்கியிருக்கிறதா? அல்லது நிலாத் தரையில் மோதி உடைந்து விட்டதா என்று திட்டமாகக் கூற முடியவில்லை என்கிறார்கள். பெரும்பாலும் இது உடைந்து சிதறி இருக்கவேண்டும் என்றே நம்பப்படுகிறது. அப்பாலோ—11 வீரர்கள், நிலாத் தரையில் வைத்துவிட்டு வந்த லாசர் என்ற கருவி மூலம்கூட இந்த உண்மைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் தெரிகிறது. இந்த லாசர் கருவி, சீக்கிரமே கெட்டுவிடக்கூடும் என்றும், ஈகிள் நிலாத் தரையை விட்டுப் புறப்படும்போது ஏற்பட்ட அதிர்ச்சியினால் லாசரின் பாதுகாப்புக் கருவிகள் உடைந்து விட்டனவென்றும் கூறி இருக்கிறார்கள். இது காரணமாகவே, அது லூனா-15 பற்றித் தகவல் தர இயலவில்லை என்றும் நம்பப்படுகிறது. ஆனால் ரஷ்யா மட்டும் 'இனி அது பூமிக்குத் திரும்பாது' என்று சொல்லி இருப்பதோடு நிறுத்திக் கொண்டிருப்பது ஆச்சரியத்தை விளைவித்திருக்கிறது, அகிலத்துக்கு!

* * *

வானொலி மூலம் இந்தியைப் பரப்புவதற்கென்றே, அகில இந்திய வானொலி நிலையம் 'விவித்பாரதி' நிகழ்ச்சியை அமைத்து நடத்திக் கொண்டிருக்கிறது. இப்போது சில காலமாக வர்த்தக ஒலிபரப்பும் கூடவே ஏற்பாடு செய்யப்பட்டு விட்டதால், லாபகரமான முறையில் அ. இ. வானொலி இந்தியைப் பரப்பிக்கொண்டிருக்கிறது. வடபுலத்து நிலையங்கள் எக்கேடாவது கெட்டொழியட்டும். தமிழகத்திலிருக்கின்ற சென்னை, திருச்சி நிலையங்களைக்கூட இந்திக்குப் பாடுபடச் செய்வது என்பது பரிதாபகரமானது. சென்னை, திருச்சி நிலைய விவித்பாரதி நிகழ்ச்சியில், ஒலிபரப்பப்படும் விளம்பரங்களைக் கவனித்தால், மிகப் பெரும்பான்மையும் தமிழக விளம்பரமாகவே இருக்கிறது. விளம்பரம் செய்வதை மட்டும் தமிழில் செய்துவிட்டு, நிகழ்ச்சிபற்றிய அறிவிப்பையும், பாடல்களையும் இந்தியில் என்று வைத்திருக்கிறார்கள். பாரபட்சமான நிலை மட்டுமல்ல, அறைகூவல் விடுக்கும் தன்மைபோலவும் இது இருக்கிறது. இந்த அறைகூவலை தமிழ்நாட்டு வணிகர்கள், வானொலிக்கு விளம்பரம் தந்திருப்பவர்கள், தமிழ் அறிவிப்பும், தமிழ்ப்பாடல்களும் மட்டும் இருந்தால் மட்டுமே விளம்பரம்–என்பதன் மூலம் ஏற்றுக் கொண்டால், நிச்சயம் வெற்றி கிடைக்கும்! முனைவார்களா? முயற்சிப்பார்களா?

* * *

நாட்டின் அமைதிக் குறைவான செயல்களைச் செய்து கொண்டுவரும் 'நக்சல் பாரிகள்' என்று அழைக்கப்படும் தீவிர கம்யூனிஸ்டுகள் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக புதிய சட்டமொன்று கொண்டுவருவது பற்றி ஆலோசிப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. எப்போதோ கொண்டுவந்திருக்க வேண்டிய சட்டமிது. இதேபோல தமிழகத்தில் நிரந்தரமாக விவசாயத்துக்குக் கேடுண்டாக்கிக் கொண்டிருப்பது என்ற முடிவில் திட்டமிட்டுச் செயல்பட்டுக் கொண்டுவருவோர் மீது நடவடிக்கை எடுத்துத் தடுத்து நிறுத்தும் வகையில் அகில இந்திய மட்டத்தில் ஒரு புதிய சட்டம் வந்தால் நல்லது. எந்தக் காரணத்தாலும் உணவு உற்பத்திக்கு ஊறு தேடுவதென்பது நாட்டுத் துரோகமான காரியமாகும், அரசியல் பிரச்னையை உணவுப் பிரச்னையோடு இணைந்து செயல்படுவதை எப்படியும் தடுத்து நிறுத்தியேயாகவேண்டும்! போலீஸ் துணையுடன் உணவு உற்பத்தி என்பது ஒரு இரங்கத்தக்கநிலைமையல்லாமல்வேறென்ன?

* * *

ஆசாத் காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான், செஞ்சீனாவின் துணைகொண்டு இராணுவ முக்கியத்துவம் வாய்ந்துள்ள ஒரு சாலை அமைத்துக் கொண்டு வருவதுபற்றி நாடாளுமன்றத்தில் பிரச்னை கிளப்பப்பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் தினேஷ்சிங், வழக்கமாகக் குறிப்பிடும் பதிலையே இப்போதும் தந்திருக்கிறார். இரு நாடுகளுக்கும் ஆட்சேபக் குறிப்புகள் அனுப்பப்பட்டிருக்கிறது என்பதுதான் அந்தப் பதில். இந்த இரு நாடுகளும் இந்தியாவின் ஆட்சேபணையை எப்போதாவது காது கொடுத்தாவது கேட்டிருக்கிறதா என்பது மத்திய அரசுக்கே வெளிச்சம்! என்றாலும் இனியும், ஆட்சேபக் குறிப்பு என்கிற அளவிலேயே இருந்துகொண்டிருந்தால், இந்தியா காட்டிக்கொடுக்கப்படுகிறது என்பதுதான் பொருள் என்று விமர்ச்சிக்கப்படுவது தவறான தாகாது!

* * *

நாட்டில் 95 சதவீத மக்கள் தன்னை ஆதரித்துக்கொண்டிருக்கும்போது சில பெரிய பத்திரிகைகள் மட்டும் எதிர்க்கத் தொடங்கி இருப்பதனை ஏனென்று தன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்று செய்தியாளர்களிடையே இந்தியப் பிரதமர் குறைபட்டுக்கொண்டிருக்கிறார். பெரிய பத்திரிகைகளின் எதிர்ப்பு ஏனென்று நமக்குப் புரிகிறது. ஆனால் 95 சதவீத மக்கள் இந்திரா அம்மையாரை ஆதரிக்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை. 95 சதவீத மக்கள் இந்திரா அம்மையாரை ஆதரிக்கிறார்கள் என்றால் அது காங்கிரசையும், அதன் கொள்கைகளையும் ஆதரிப்பது என்பதாகத்தான் இருக்கமுடியும். அப்படியானால் இன்று இந்தியாவில் எந்த மாநிலத்திலும் எதிர்க்கட்சிகளின் ஆட்சியே இருக்கக்கூடாது. நடைபெறுகின்ற எந்த தேர்தல்களிலும் காங்கிரஸ் தோல்வியைத் தழுவக்கூடாது. நிலைமைகள் பிரதமரின் கருத்துக்கு எதிராகத்தான் காட்சியளிக்கின்றன. பிரதமர் எதைக் கொண்டு 95 சதவீத மக்கள் தன்னை ஆதரிக்கிறார்கள் என்கிறாரோ தெரியவில்லை. ஒருகால், பாங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட சம்பவத்தை வைத்துச் சொல்கிறாரோ?



**பசிக் கொடுமை!**

மழை, வேண்டுங்காலத்துப் பெய்யாது பொய்த்தொழியுமாயின், கடலாலே சூழப் பட்ட வையம், பசிக் கொடுமையால் வாடியே தீரும்.

—குறள் (18)


# காஞ்சி

நிறுவனர்: அண்ணதுரை

மலர் 6 | 27—7—69 | இதழ் 2


# பசுமைப் புரட்சி

கடும் வறட்சி காரணமாக, தமிழகமெங்கும் குடி நீர்ப் பற்ருக்குறை பரவலாகவே ஏற்பட்டிருக்கிறது. ஏரி, குளம், குட்டைகள் மட்டுமல்லாமல், கிணறுகள் கூட நீர்வற்றிக் காணப்படும் நிலை யேற்பட்டிருக்கிறது. இதற்காக நாம் இயற்கையைக் காய்ந்துகொள்ள முடியாது. வான் மழை பொய்த்துப் போய் வறட்சி யேற்படுவதற்கு ஆட்சியினரையும் குறைகூற முடியாது.

வான் பொய்ப்பினும் தான் பொய்யா நாடு தமிழ் நாடு. எவ்வளவு கடும் வறட்சி யேற்பட்டாலும் அவற்றை யெல்லாம் சமாளிக்கக்கூடிய ஆற்றல் தன்னகத்தே உண்டு என்பதை மெய்ப்பிக்கும் சான்ருக பூமிக்கடியிலே தேவையான அளவுக்கும் அதிகமாகவே நீர் தேங்கி இருக்கிறது.

பூமிக்கடியிலே தேங்கியிருக்கும் நீரை, குழாய்க் கிணறுகள் மூலம் மேலே கொண்டுவந்து, அதனை விவசாயத்துக்கும், குடிப்பதற்கும் பயன்படுத்திக் கொள்ளும் முறையாக, மாபெரும்திட்டம்ஒன்றைமறைந்தமாமேதை பேரறிஞர் அண்ணு அவர்கள் வகுத்திருந்தார்கள்.

டாக்டர் அண்ணு அவர்களால் வகுக்கப்பட்ட அத்திட்டம், செயல்படத் தொடங்கும் முன்னதாகவே, அண்ணு அவர்கள் மறைந்து போனுலும், தான் தந்த அந்த திட்டத்தின் மூலம் தாரணியை வாழச் செய்யும் பெரும் கடனாற்றி விட்டிருக்கிருர்கள்!

தமிழக அரசில், கூட்டுறவுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் மாண்புமிகு ஆதித்தனர் அவர்கள், இப்போது மாநிலத்தில் பசுமைப் புரட்சியைத் தோற்றுவிக்கும் முயற்சியிலீடுபட்டு, செய்தி அறிவித்திருப்பது பெருமகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது.

நிலத்துக்கடியில் தேங்கி இருக்கும் நீர் பற்றிய ஆராய்ச்சியைத் தொடங்க புதிய அமைப்பொன்றை தொடங்கவிருப்பதாக அவர் அறிவித்திருக்கிருர்.

குழாய்க் கிணறுகள் மூலம், பூமிக்கடியில் உள்ள தண்ணீரை மேலே கொண்டுவர எடுக்கும் முயற்சிகளுக்கு ரூ. 141 கோடி தேவைப்படுகிறது என்றும், இதனில் 90 சதவீதத்தை மத்திய அரசின் விவசாய மூலதன கார்ப்பொரேஷன் தமிழக அரசுக்குக் கொடுக்க ஒப்புக்கொண்டிருப்பதாகவும், ஆனுல் அதற்கு முன், ஒவ்வொரு குழாய்க்கிணறுகள் தோண்டப்படுமிடத்தில் நிச்சயமாக நீர் கிடைக்கும் என்பதற்குத் தமிழக அரசு, மத்திய அரசுக்கு உத்திரவாதம் தரவேண்டியிருக்கிறது என்றும் தகவல் தந்திருக்கிருர்.

இதன் அடிப்படையிலேயே, தமிழக அரசு, முதல் கட்டமாக எங்கெங்கு நீர் கிடைக்கும் என்பதற்கான ஆராய்ச்சியை நடத்தும் என்றும் அவர் விளக்கி இருக்கிருர்.

இந்த முயற்சியின் முதல் கட்டமாக இந்த ஆண்டு சுமார் 60 கோடி ரூபாய் செலவாகுமென்றும் மூன்ருண்டுக் காலத்துக்குள் இது முடிவுபெற முடியும் என்றும் அவர் தெரிவித்திருப்பது இரட்டைமகிழ்ச்சியைத் தருகிறது.

தமிழகத்தில் பெரும்பான்மையான பகுதிகளில் சுமார் 30 அடி ஆழம் தோண்டினலே தண்ணீர் கிடைக்கிறது; இவ்வாறு 30 அடி ஆழ குழாய்க் கிணறு ஒன்று அமைக்க ரூ. 11,500 செலவாகிறது என்றும் தெரிகிறது. இந்தக் கணக்குப்படி, திட்டமிட்டபடி நடப்பு ஆண்டில் ஒதுக்கும் ரூ. 60 கோடிக்கு, சுமார் 52,000 குழாய்க் கிணறுகள் வெட்டமுடியும். திட்டத் தொகை முழுவதும் செலவிடப்படும்போது ஒரு இலட்சத்து நாலாயிரம் குழாய்க் கிணறுகள் தமிழகமெங்கும் அமைக்கப்பட்டிருக்கும்.

அமைக்கப்படும் குழாய்க் கிணறுகள் நிரந்தரத் தன்மையுடன் இருக்குமாறு கவனித்துக்கொள்ளப்படும் என்பதில் ஐயமில்லை, ஆனுல் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு வான்பொய்த்துப் போனுல்கூட கவலைப்பட வேண்டியிராது என்ற கணிப்பிற்கு, இந்த அளவு கிணறுகள் போதுமானவையாக இருக்குமா என்பதை அறிவதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போதிய அக்கறை எடுத்துக் கொண்டால் நல்லது.

தமிழகத்தில் இப்போது அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டு வரும் தண்ணீர்த் தட்டுப்பாட்டுக்குக் கங்கையையும் காவேரியையும் இணைப்பது என்று பேசப்படுகிற நேரத்திலேயே, காவிரி இணைப்புப் பெற்ருலும், இணைக்கப்படாது போனுலும், வான் மழை பெய்தாலும், பெய்யா தொழிந்தாலும், குடிப்பதற்கு மட்டுமல்ல, விவசாயத்துக்கே கூட போதிய தண்ணீர் கிடைக்க வழிசெய்ய முடியும் என்பது சாதாரணமான விஷயமல்ல.

இவ்வளவு சிறப்புக்குரிய—பேரறிஞர் அண்ணு அவர்களது திட்டத்தை, காலத்தே செய்து முடிக்க முன்வந்த ஆதித்தனர் அவர்களுக்கு, நாடு, காலம் முழுதும் நன்றி சொல்லிக் கொண்டிருக்கும்.

அமெரிக்காவின் அப்பாலோ—11 நிலாவுலகை வெற்றி கண்டதுபோல, இத்திட்டம் வெற்றி நல்கும் போது, இயற்கையையே வென்றது தமிழகம் என்று பெருமிதம் கொள்ள முடியும், அந்தப் பெருமிதம் தமிழக அரசுக்கும், அதனை யேற்று நடாத்தும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் நிச்சயம் உண்டு.

சீரிய முறையில் செயல்பட்டு, பசுமைப் புரட்சியிலே வெற்றி காணும்போது, மாண்புமிகு ஆதித்தனருக்கும், அந்த வெற்றியில் பங்கு நிச்சயம் இருக்கும்.

# கன்னிமை கழிந்த தண்நிலா!

வெண்ணிலவை, வீரர்கள் வெற்றி கண்ட வரலாற்று முக்கியத்வ மிக்க நிகழ்ச்சி நடைபெற்று முடிந்திருக்கிறது இந்தக் கிழமை. கடந்த 22-7-69-ம் நாள் காலை 8-26க்கு மனிதனின் முதல் காலடி சந்திர மண்டலத்தில் பதிக்கப்பட்டுவிட்டது. அந்த மாவீரனின் புகழ் பூமண்டலம் உள்ள வரையில் இனி மறையப் போவதில்லை. இயற்கையை வென்று வந்திருக்கும் முதல் மனிதன் ஆம்ஸ்ட்ராங்கும், இவரது தோழரும், இரண்டாவதாகத் தடம் பதித்தவருமான ஆல்டிரினும் மீண்டு வந்து, தெரிவிக்க இருக்கின்றவைகள், விஞ்ஞான உலகுக்குப் புது வழிகாட்டிகளாக இருக்கக் கூடும்.

ஆம்ஸ்ட்ராங்கும், ஆல்டிரினும் நிலாத் தடத்தில் 2 மணி 55 நிமிட நேரம் தங்கி இருக்கிறார்கள். இந்த நேரத்தில் அவர்கள் நிலவுத் தரை பற்றியும் சுற்று மண்டலம் பற்றியும் மனம்போன போக்கிலும், திட்டமிட்டபடியும் புகைப்படங்களை எடுத்திருக்கிறார்கள்.

நிலவுத் தரையில், அவர்களைக் கொண்டு இறக்கிய 'ஈகிள்' என்ற கலத்திலிருந்து சுமார் 15அடி தூரம் வரையில் அவர்கள் நடந்திருக்கிறார்கள். முன்னும் பின்னுமாகத் தத்தித் தத்தி நடந்தும், தாவிக் குதித்துமிருக்கிறார்கள். பூமண்டலத்திலிருந்து சந்திர மண்டலத்து தரை பற்றிக் கணித்த கணிப்பைவிட, அங்கே நடந்துசெல்வது எளிதாக இருந்ததாக ஆம்ஸ்ட்ராங் தெரிவித்திருக்கிறார்.

நிலவுத் தரையில் ஆம்ஸ்ட்ராங்கும், ஆல்டிரினும் பல்வேறுபட்ட இடங்களிலிருந்து மண்ணும், கற்களும் சேகரித்துக்கொண்டு வருகிறார்கள். இந்த சேகரிப்புக்களிலிருந்து தெரிந்துகொள்ளும் விஞ்ஞான உண்மைகளிலிருந்து மனித உயிர் அங்கே நிலைக்குமா? மனிதன் 'குடியிருக்க நிர் கிடைக்குமா? என்பதுபற்றியெல்லாம் தகவல் கிடைக்கக் கூடும்.

பூமியிலிருக்கும்போதுள்ள ஒரு பொருளின் எடை, சந்திர மண்டலத்தில் 6ல் ஒரு பங்காகக்குறைந்து விடும் என்று கணித்திருக்கிறார்கள். இந்த உண்மையினை இனி தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும்.

'ஈகிள்' வீரர்கள் சந்திரனின் தரையில் இறங்கியவுடன் பூமண்டலத்துக்குத் தந்த செய்தி மனிதகுலம் அனைத்துக்கும் பொதுவானது.

> “இது, மனிதன் எடுத்து வைத்த சிறு அடியாகும்; ஆனால், மனித குலத்துக்கோ மாபெரும் பாய்ச்சலாகும்.”

என்பதுதான் அந்தச் செய்தி.

நிலாத் தரையில் ஞாயிறன்று நள்ளிரவு 11-47க்கு அவர்கள் சென்றகலம் இறங்கியது. எனினும் சுமார் 9 மணி நேரம் கழித்துத்தான் கீழே இறங்கி இருக்கிறார்கள். இது போலவே திங்கட்கிழமை இரவு சுமார் 11-45க்கு அங்கிருந்து, பூமிக்குத் திரும்பி இருக்கிறார்கள்.

நிலவில் இறங்கியது முதல். மீண்டும் புறப்பட்டது வரை வீரர்கள் நிலாத்தரையிலும், கலத்திலுமாக அந்த மண்டலத்தில் மொத்தம் 21 மணி 26 நிமிடங்களைக் கழித்திருக்கிறார்கள்.

இந்தநேரத்தில் அவர்கள், பூமியிலிருந்து எடுத்துச் சென்ற ஒரு மனிதகுலப் பட்டயத்தை நிலாத் தரையில் பதித்துவிட்டு வந்திருக்கிறார்கள்.

> “இங்கு பூமியிலிருந்து மனிதர்கள் கி. பி. 1969 ஜூலை மாதம், முதலில் அடியெடுத்து வைத்தனர்; மனித குலம் அனைத்துக்குமான அமைதிக்காகவே வந்தோம்.”

என்று அந்தப் பட்டயத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அமெரிக்கக் குடியரசுத் தலைவர், இந்தியக் குடியரசுத் தலைவர் முதலான உலகத் தலைவர்கள் பலரது நல்லெண்ணங்களைப் பதித்ததொரு பட்டயமும் அங்கே விடப்பட்டு வந்திருப்பதுடன், அமெரிக்கக் கொடியும் நாட்டப்பட்டு விட்டிருக்கிறது. இவையல்லாமல் சுமார் 10 லட்சம் டாலர்கள் மதிப்புள்ள பல பொருட்களையும் நினைவுச் சின்னங்களாக அங்கே வீசியெறிந்துவிட்டு வந்திருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து ஐந்து தாயத்துக்கள் அனுப்பப்பட்டதையும் போட்டுவிட்டிருக்கிறார்கள்.

நிலவு வீரர்கள் தங்களோடு, நிலாத் தரைக்குக் கொண்டுசென்ற பிராணவாயு, சுமார் மூன்று மணி நேரம் மட்டுமே அங்கு தங்கி இருக்கப் போதுமானது என்று பூமியில் கருதப்பட்டது. காரணம், நிலாத்தரையில் வீரர்களது இயக்கம் கடினமானதாக இருக்கக்கூடும் என்று நம்பப்பட்டதேயாகும். ஆனால், எதிர்பார்த்ததற்கு மாறாக அவர்கள் இயக்கம் துல்லியமாகவும், இலகுவானதாகவும் இருந்ததனால், பிராணவாயு சுமார் 5 மணி நேரம் வரையில் போதுமானதாக இருக்கும் என்று அறிவிக்கப் பெற்றாலும், வீரர்கள் தங்கள் கடமையை மூன்று மணி நேரத்துக்கு முன்னதாகவே முடித்துக்கொண்டு கலத்துக்குத் திரும்பிவிட்டதால், மூச்சுவிடும் பிரச்னை, முக்கியமான இடம் பற்றாமல் போய் இருக்கிறது என்பதில் வியப்பேதுமில்லை.

வீரர்கள் நிலாத்தடத்தில் இருந்த போது பலவற்றை உணர்ந்து, உலகுக்குஅறிவித்திருக்கிறார்கள். நிலாத் தடம், அதன் மேல்பரப்பு பாலைவனத்தைப் போல இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். தங்களது அடிச்சுவடுகள், ஆழமானதாகப் பதியவில்லை யென்றும் அரை அங்குலம் முதல் மூன்று அங்குலம் ஆழம் வரையிலுமே பதிந்ததாகவும் தெரிவித்து, அதனால் நிலாத் தடம் கடினமானதாகத்தானிருக்க வேண்டும் என்ற கருத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

இவை யெல்லாவற்றையும், “ஈகிள்” நிலவுத் தரையில் இறங்கியதிலிருந்து, மறுநாள் புறப்படு வரையில், பல பகுதிகளிலும் டெலிவிஷன் மூலம் கண்டு களிபேருவகை கொண்டிருக்கிறது வையம், அனைத்துக்கு மேலாக நிலவுத் தரையிலிருந்து கொண்டு பூமியிலிருப்பவர்களுடன் பேசி இருக்கிறார்கள் வீரர்கள்!

இந்தக் கிழமை வியாழன் இரவு இந்திய நேரப்படி 9-21க்கு பசிபிக் கடலில் இவர்கள் இறங்கியுள்ளனர். பாவம், இவ்வளவு அரும்பாடுபட்டு சந்திர மண்டலம் போய்விட்டுத் திரும்பும் தாய்க் கப்பலின் தளபதி காலின்சும், நிலவு வீரர்கள் ஆம்ஸ்ராங்கும், அவரதுதோழர் ஆல்டிரினும், ‘மனிதர்”களிடையே இருந்து 18 நாளைக்குப் பிரிக்கப்பட்டு விடுவார்களாம்!

விண் வெளியிலும், சந்திர உலகிலும் இருக்கின்ற நச்சுக் கிருமிகளால், உலகுக்கோ, மனிதனுக்கோ ஏதேனும் கேடுண்டாகக் கூடும் என்று கருதப்படுவதால், இவர்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு “குவாரண்டைனி”ல் அடைக்கப்படுவார்களாம்!

# தம்பி

# மிரட்டல்! விரட்டல்!

நூக்கோரைத் தேர்ந்தெடுத்து கலைத் தூதுக்குழுவிலே அனுப்பும் திறம் மத்திய சர்க்காருக்கு இல்லை; தட்டிக்கேட்கும் துணிவு, சென்னையில் இல்லை, அமைச்சர்களை அச்சம் தடுக்கிறது, துணிந்து சில வேளைகளில் கேட்டாலோ மிரட்டல், விரட்டல், தான் கிடைக்கிறது என்று கூறினவர் யார் என்ற ஆவலைக் கொண்டிடச் செய்தேன் அல்லவா—கோபமில்லையே என்மீது அதற்காக!! மனம் நொந்து அவர் இது போல் கூறுகிறார் — அரசியல் துறையிலே ஈடுபாடு கொண்டவரல்ல—ஆசிரியத் தொழிலில் இருப்பவர்—அமைதியில் ஆனந்தம் காண்பவர்—அனைத்தையும் துருவித் துருவிக் கண்டறிவார். அவ்வளவும் சொல்லிவிடக்கூடமாட்டார்! —இவ்வளவு போதும் — கோடிட்டுக் காட்டினாலும் போதும் — இப்போதைக்கு இவ்வளவு போதும் — என்று அவ்வப்போது அளந்து அளந்து கருத்து அளித்து வருபவர் — என் நண்பர்—தமிழருக்கு நல்லபல ஏடுகளைத் தந்துள்ளவர்—பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பெரும் பேராசிரியராக இருப்பவர், டாக்டர் மு. வரதராசன்.

பழைய நாட்களிலே, தம்பி, எவருடைய இடித்துரைக்கும் கலங்காது காட்டாட்சி நடாத்துபவருங்கூட, புலவர்கள் புத்தி புகட்டுகின்றனர் என்றால், வெட்கப்படுவர், வேதனைப்படுவர், திருத்திக்கொள்ள முற்படுவர் என்று இலக்கியங்களிலே காணுகிறோம்.

இன்றைய ஆட்சியினரோ, மக்களைப் பார்த்து, "பாமரர் நீவிர்! உமக்கு இதெல்லாம் என்ன தெரியும்!" என்று கூறியும், புலவர்களைப் பார்த்து, "ஏடு தூக்கிடும், உமக்கு ஏனய்யா இந்த வீண்வேலை" என்று ஏளனம் செய்தும் இறுமாந்து கிடக்கின்றனர்.

அதிலும், தமிழாசிரியர்கள்—அதிலும் குறிப்பாகத் தமிழ் இனத்துக்கென்று ஓர் தனி வாழ்வு அமைதல் வேண்டும் என்ற ஆர்வம் கொண்டார் — ஆரியம் இது, தமிழ்நெறி இது என்று பிரித்துக் காட்டிடும் போக்கினர் என்றால், பெருங்கோபம் பீறிட்டுக்கொண்டு கிளம்புகிறது.

அவர்களை, 'நாத்திகர்' என்று நிந்திக்கவும், ஆட்சியாளர்கள் துடித்தெழுகின்றனர்.

எனவே, டாக்டர் மு. வ.வின் இந்தக் கருத்துரை கேட்டு, ஆட்சியாளர் திருந்த முற்படுவர் என்று நான் எண்ணவுமில்லை, எதிர்பார்க்கவுமில்லை — அவருக்கும் அந்த நம்பிக்கை எழுமா என்பது ஐயப்பாடுதான்! நேரடியாக அரசியல் துறையிலே ஈடுபாடு கொள்ளாதவரும், இன்றைய அரசியலில் நெளியும் நிலைமையைக் கண்டு மனம் பொறுது பேச வேண்டி வந்ததே என்பதை நாடு காண்கிறது! அதன் பயன் மிகுதியும் உண்டு என்பது என் எண்ணம்.

அரசியல் துறைக்குத் தம்மை ஒப்படைக்காமல், பேதம் பிளவு என்பவை தீது, ஒற்றுமை சமரசம் என்பன நற்பண்புகள் என்பதை வலியுறுத்தத் தவறாமலிருக்கும் தமிழ்ப் பேராசிரியர்களே, டில்லியிடம் சிக்கிக்கொண்டு, நமது அமைச்சர்கள் அச்சத்தால் தாக்குண்டு கிடக்கும் நிலைகண்டு மனம் வெதும்புகின்றனர்.

பலருக்கும் பாரதம் ஒரே நாடு, இதனைத் தனித் தனி நாடுகளாக்கிவிட்டால்

26.7.69



# அரசினை விழுங்குதல் அன்றோ பிரச்னை!

ஒற்றுமை குலைந்துபோகும் என்று டில்லிப் பெரியவர்கள் பேசும்போது, ஆம் என்றுதான் கூறத் தோன்றுகிறது. அதிலும் தமிழாசிரியர்கள், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நெறியினைப் பாராட்டுபவரல்லவா! எனவே, பாரதநாடு ஒரே ஆட்சியின் கீழ் இருத்தல் முறை என்று கூறப்படும்போது அவர்கள் இசைவு அளிப்பது மட்டுமல்ல, எம்மனோர் உலகு முழுவதையுமே ஒரே நாடு என்று எண்ணிச் சொந்தம் கொண்டாடிய பெருநோக்கினர்! இமயத்துடன் நிற்பானேன்—கடலையும் கடந்து எல்லா எல்லைக் கோடுகளையும் கலைத்தொழித்துக்கூட 'உலகு ஒன்று' என்ற உன்னதம் காணலாம் என்று உள்ளன்புடன் கூறத் தயங்குவதில்லை.

ஆனால், அவர்கட்கும் ஒற்றுமை ஓரரசு பேரரசு என்பதன் பேரால் அநீதி நடந்திடும்போது மனம் வெதும்புகிறது — இடித்துரைக்க முற்படுகின்றனர். ஆட்சியாளர்களோ, அரசியல் துறையினர் பேசும்போது, இதெல்லாம் அரசியல்வாதிகள் கிளப்பிவிடும் கேடுகள் என்று சுடுசொல் கூறியும், தமிழாசிரியர்கள் பேசும்போது, ஆத்திச்சூடியும் கொன்றை வேந்தனும் படித்துக்கொண்டு கிடப்பதைவிட்டு இந்த ஆசிரியர்கள் ஏன் அரசியலில் தலையிடவேண்டும் என்று அலட்சியமாகப் பேசியும் ஆணவப் போக்குடன் உள்ளனர்.

விரட்டல், மிரட்டல் டில்லியிடமிருந்து நாம் பெறுவது இவையே என்று கூறுமுன்னர், டாக்டர் பல நூறு முறை தயங்கியிருப்பார் — சொல்வதா வேண்டாமா? சொல்லிப் பயன் காணமுடியுமா? சொல்வது கேட்டு, நம்மை இன்னார் என்று கண்டுகொண்டு காய்ந்திட மட்டுமே பயன்படுமோ? என்று பலப்பல வகையில் யோசித்துவிட்டு. முடிவிலேதான் இதனைச் சொல்லியே தீரவேண்டும் என்று துணிந்து கூறிவிட்டிருக்கிறார்.

தம்பி! கலைத்துறைப் பிரச்சினையில் மட்டுமே இந்த நிலையா என்றால் இல்லை, இல்லை, கலைத்துறைப் பிரச்சினையிலும் இது, என்றுதான் கூறவேண்டி இருக்கிறது. எந்தத் துறையிலும் இதே நிலைதான்! எந்தத் துறையிலும் டில்லி துரைத்தனம், தமிழர்க்கும் தமிழகத்துக்கும் இதே விதமான மிரட்டல் விரட்டல் அளித்துக் கொண்டுதான் அமுல் நடத்தி வருகிறது. அவ்வப்போது, ஒவ்வோர் துறையினர் உள்ளம் வெதும்பிப் பேசுவர்! மற்றத் துறையினர் அதுபோது, பிரச்சினை, எந்தத் துறையினர் மனம் நொந்து பேசுகின்றனரோ, அந்த ஒரு துறைக்கு மட்டுமே உரியது என்று எண்ணி தமக்கு உரிய பிரச்சினை அல்ல என்று எண்ணிக் கொண்டுவிடுகின்றனர்.

டாக்டர் மு. வ. கலைத்துறையில், டில்லி காட்டும் கருத்தற்ற போக்கினையும், சென்னையில் உள்ள அச்சத்தையும் எடுத்துக் காட்டும்போது, வாணிபத் துறையினர். இது தமக்குத் தொடர்பற்ற பிரச்சினை என்று இருந்துவிடுகின்றனர்; அதுபோன்றே வாணிபத் துறையில் எழும் பிரச்சினையில், டில்லி காட்டும் ஆணவப் போக்கினை, வணிகர் சங்கம் கண்டித்தெழும்போது, டாக்டர் மு. வ. போன்ற தமிழாசிரியர்கள், இது வணிகர்களின் பிரச்சினை, நமக்கு உரியதல்ல என்று ஒதுங்கி நிற்பர். எனவே கூட்டு எண்ணம், ஏற்பட வழி கிடைப்பதில்லை. தம்பி! நாம், எந்தத் துறையுடன் நேரடியாகத் தொடர்புகொண்ட பிரச்சினையாக இருப்பினும், அந்தப் பிரச்சினை, 'டில்லி — சென்னை தொடர்பினை' எடுத்துக் காட்டுவதாக அமைந்தால், அந்தப் பிரச்சினையை நமக்கு உரிய பிரச்சினை — நாட்டு மக்கள் கவனிக்க வேண்டிய பிரச்சினை என்றுதான் கொள்கிறோம். இது தமிழாசிரியர் கவனிக்க வேண்டிய பிரச்சினை, இது துரைத்தன ஊழியருக்கு மட்டுமே உரிய பிரச்சினை, இது பாட்டாளிகளுக்கு மட்டுமே சொந்தமானது என்று எந்தப் பிரச்சினையையும் நாம் ஒதுக்கிவிடுவதில்லை. காரணம், நமக்கு எந்தப் பிரச்சினையும் அந்த ஒருபெரும் பிரச்சினை இருக்கிறதே. தனி அரசுகளை விழுங்கிக் கொழுத்து பேரரசு ஒன்று உருவெடுக்கும் பிரச்சினை, அதனுடைய பல கூறுகளிலே ஒன்றாகவே படுகிறது.

கைகால் பிடிப்புக்காரன், தைலம் தடவியும், வலியுள்ள இடத்தை நீவியும் நலன்பெற முயல்வது இயல்பு என்றாலும், வலிக்கு உள்ள காரணம் களைந்திடுவதற்கான மருத்துவம் பார்த்துக்கொண்டாக வேண்டுமல்லவா. நாம் அந்த நல்ல மருந்து தேடுகிறோம். அதுபோது, ஐயோ முதுகு எலும்பு வலிக்கிறதே! கண் எரிச்சல் தருகிறதே! கைகால் பிடிப்பு ஏற்பட்டுவிட்டதே! குமட்டலெடுக்கிறது, குடைச்சலுமிருக்கிறது! என்று அவரவர் தத்தமக்கு வந்து தாக்கும் வலி பற்றி வாய்விட்டுக் கூறிடக் கேட்கிறோம்—கேட்கும்போது நமக்கு, இவையாவும், தனித்தனி நோய்களல்ல, வெறும் குறிகள், என்று புலப்படுகிறது.

கலை, மொழி, எல்லை எனப்படும் துறைகளிலே மட்டுமே தமிழருக்கு மிரட்டல்!—விரட்டல்! டில்லியிடமிருந்து கிடைக்கிறது, மற்றமற்ற துறைகளிலே அரவணைப்பு கிடைக்கிறதா! எல்லாத் துறைகளிலும், ஏன்? என்ற குரல் கேட்கும் போதெல்லாம், மிரட்டல்!—விரட்டல்!

தம்பி! டில்லியில், சென்ற திங்கள். இந்தியப் பேரரசு பல்கலைக் கழக இளைஞர் விழா நடத்திற்று. இதில் 31 பல்கலைக் கழகங்கள் கலந்துகொண்டன. 1600 மாணவர்கள் சென்றனர், நேரு பண்டிதர் இதில் கலந்துகொண்டு சிறப்பளித்தார்.

சென்னைப் பல்கலைக் கழகம் மட்டும் இந்த விழாவிற்குப் பிரதிநிதிகளை அனுப்பிவைக்கவில்லை.

பாட்டும் கூத்தும், கேளிக்கையும் நிறைந்த விழா—ஒவ்வோர் பல்கலைக் கழகமும் தத்தமது கோட்டத்தில் வளர்ந்துள்ள கலைத்திறனைக் காட்டிடும் வாய்ப்பு—இதிலே சென்னைப் பல்கலைக் கழகம் கலந்துகொள்ளவில்லை. காரணம் என்ன?

இந்தியப் பேரரசு, சென்னைப் பல்கலைக் கழகத்தின் வேண்டுகோளைப் புறக்கணித்தது. மதியாதார் தலைவாசல் மதிக்கமாட்டோம் என்று சென்னைப் பல்கலைக் கூறிவிட்டது.

இந்த விழா, ஆண்டுதோறும் டில்லியிலேயே நடத்துகிறீர்கள்—இதுசரியல்ல—ஒவ்வோர் ஆண்டு ஒவ்வோர் 'ராஜ்ய'த்தில் நடத்துவதுதான் நல்லது என்று சென்னைப் பல்கலைக் கழகம் கூறிற்று. இந்தச் சாதாரணமான நியாயத்தைக்கூட ஏற்றுக்கொள்ள டில்லிக்கு விருப்பம் இல்லை.

டில்லி ஒரு திட்டம் வகுப்பது, அதை முறை

# இடியும் கடியும் பொறுத்துக்கொண்டு

யில்லை, சரியில்லை என்று கூறி, சென்னை மறுப்பதா!

நந்தா! உனக்கேன் இந்தப் புத்தி!

டில்லியின் போக்கு இதுபோலிருந்திருக்கவேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் யோசனையைப் புறக்கணித்தது.

புண்பட்ட மனம்; சென்னைப் பல்கலைக் கழகம், இதனைக் காட்டவும், தன் கண்டனத்தைத் தெரிவிக்கவும் டில்லி விழாவில் கலந்துகொள்ளவில்லை.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பல பாடங்கள் போதிக்கப்படுகின்றன. ஆனால் திராவிடநாடு திராவிடருக்கே என்பது பாடமாக்கப் பட்டதில்லை! சென்னைப் பல்கலைக் கழகம் கேட்டதெல்லாம் விநயமான ஒரு கோரிக்கை'—அதற்கே டில்லி இணங்கவில்லை.

சென்னைப் பல்கலைக்கழகம் என்ன செய்யும்? என்ன செய்தார் டாக்டர் மு. வ! கலைத்தூதுக்குழு சம்பந்தமாக டில்லி காட்டும் போக்கைக் கண்டு மனம் வெதும்பி—மிரட்டல்—விரட்டல் என்று கூறினர், சென்னை பல்கலைக் கழகம், விழாவில் கலந்துகொள்ளாது ஒதுங்கிநின்றது! அவ்வளவுதான்!!

சென்னைப் பல்கலைக் கழகம் இதுபோல் நடந்துகொண்ட காரணம் என்ன என்பது கூடப் பொது மக்களுக்குத் தெரியாது. தெரிவிக்கப்பட்டாலும், மற்றத் துறையினர் இது குறித்து அக்கறை காட்டி, இது டில்லி ஆதிக்கத்தின் ஒரு 'கூறு'தான் என்று கூறிட முன்வந்திருப்பார்களா என்பதும் சந்தேகமே!

ஒன்றுபட்டு, தமிழகம் தன் உள்ளக் கொதிப்பை எடுத்துக் காட்டும் வாய்ப்பே ஏற்படவில்லை.

கலை, கல்வித்துறை பற்றிய பிரச்சினை நம்முடையதல்ல என்று மற்றவர்களும், எல்லை, உரிமை, என்பன அரசியல் வாதிகளின் ஆயாசப் பேச்சு என்று கலை கல்வித் துறையினரும், வாணிபம், இலாப வேட்டைக்காரர் பிரச்சினை, இதில் நமக்கென்ன அக்கறை என்று பிற துறையினரும், இவ்விதம், ஒவ்வொருவர் ஒவ்வோர் 'முனை'யில் மட்டும் பார்வையைச் செலுத்திக்கொண்டு, பிற பிரச்சினைகளில் கருத்தைச் செலுத்துவதே தேவையில்லை என்று எண்ணும் போக்குக் காண்கிறோம். அது மட்டுமல்ல; இவர் ஒவ்வொருவரும், எதற்கும் 'பிள்ளையார் சுழி' போடுவது என்பார்களே, அதுபோல, டில்லியின் போக்கைக் கண்டிக்கக் கிளம்பும்போதே, எமக்கு இந்தியா ஒரு நாடு என்பதிலோ இந்தியர் ஓர் இன மக்கள் என்பதிலோ, ஐயம் இல்லை. நாங்கள், நாடு துண்டாடப்பட வேண்டும் என்ற தீயகொள்கை கொண்டோரல்ல! இந்தியாவின் ஐக்யமே, எமது பேச்சு, மூச்சு; என்ற 'துதி' பாடிவிட்டுத்தான், தமது கண்டனத்தை வெளியிடுகின்றனர். இப்படிப் பட்ட 'அடக்கமான'வர்களுக்கே, டில்லி வழங்குவது, மிரட்டல், விரட்டல்!

எத்தனை காலத்துக்கு, எத்தனை பிரச்சினைகளுக்கு, இப்படி இருகரம் கூப்பி, ஐயா! ஐயா! என்று இறைஞ்சி நின்று, இடியும் கடியும் பட்டுத் தீரவேண்டும் என்று இவர்கள் எண்ணுகிறார்களோ, தெரியவில்லை.

தம்பி, ஒன்று புரிகிறது. இன்று எனக்கு வந்த தபாலில், டில்லியிலிருந்து வெளியாகும், இந்துஸ்தான் டைம்ஸ் இதழிலிருந்து ஒரு துணுக்கு வெட்டி அனுப்பி வைத்திருந்தார் ஒரு நண்பர். இந்த இதழ் மகாத்மாவின் புத்ரரும் ஆச்சாரியாரின் மருகருமான தேவதாஸ் காந்தியை ஆசிரியராகக்கொண்டது.

இடியும் கடியும் பொறுத்துக்கொண்டு, வலியையும் வெளியே தெரியவிடுவது நாகரிகமல்லவென்று கருதிக் கொண்டு, கரம் கூப்பிச் சிரம் தாழ்த்தி, கண்ணீர் பொழிந்து கனிவு பெறலாம் என்று காத்து நிற்போர் மட்டுமல்ல, தமிழகத்தில் விளைவு விபரீதமாகுமோ, அடக்குமுறை அவிழ்த்துவிடப்படுமோ என்பது பற்றிய அச்சமற்று, வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கும் ஓர் கழகம் இருக்கிறது, அது, தி. மு. க. என்பதை, டில்லி வட்டாரத்து ஏடு புரிந்துகொண்டிருப்பது, நன்றாகத் தெரிகிறது.

இந்துஸ்தான் டைம்ஸ் இதழில், தி. மு. க. தேர்தலில் ஈடுபட இருப்பது பற்றிய குறிப்புரை வெளிவந்திருக்கிறது.

வழக்கமான வசையும் — சாபமும் காண்கிறேன், குறிப்புரையில்.

கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு காமராஜர் கிளம்பிவிட்டார், எனவே இந்த தி. மு. க. தோற்று அழிந்துபோகும் என்று அந்த இதழ் 'ஜோதிடம்' கூறுகிறது.

பிறகோ, அந்த ஜோதிடத்தில் அதற்கு நம்பிக்கையில்லாமல், இந்த தி. மு. க., திராவிடநாடு, தனிநாடு என்றெல்லாம் பேசுகிறது—இப்படிப்பட்ட பேச்சுக்கு இந்திய அரசியல் சட்டத்தில் இடமில்லை என்று எடுத்துக்காட்டி, வக்கீலாகிறது; வழக்கறிஞர் வேலையில் மற்றவர்களும் ஈடுபட்டு, இந்திய அரசியல் சட்டத்தில் அதற்கு இடம் இல்லை என்றால் என்ன, ஐயா! அதற்கு இடம் இருக்கும் வகையில், இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும் என்பதை எடுத்துக்காட்டி, மக்களிடம் பேசலாமல்லவா, என்று வாதாடக்கூடுமே என்ற அச்சம் பிறக்கிறது. உடனே, வழக்கறிஞர் வேலையை விட்டுத் தொலைத்து, போலீஸ் வேலையை இந்த இதழ் மேற்கொண்டு, தி. மு. கழகத்தை இனியும் சும்மா விட்டுவைக்கக்கூடாது! இராஜத்துரோகக் குற்றம் செய்கிறது இந்தக் கழகம்! உடனே தகுந்த நடவடிக்கை எடுத்து, தி.மு. கழகத்தை ஒடுக்கித் தீரவேண்டும் என்று உத்திரவு பிறப்பிக்கிறது.

ஜோதிடர் வேடம் கண்டு சிரிப்பு வருகிறது, வழக்கறிஞர் கோலம் காணும்போது பரிதாபமாக இருக்கிறது, போலீஸ் குரலில் பேசக் கேட்கும்போதோ, இந்த இதழிடம் எனக்கு அனுதாபம்கூட ஏற்படுகிறது. எவ்வளவு கிலி, பாபம், இந்த இதழுக்கு.

இந்துவும் மித்திரனும் இடம் அளிப்பதில்லை, கல்கியும் விகடனும் கவனம் செலுத்துவதாகக் காட்டிக் கொள்வதில்லை, காட்டுக் கூச்சல், கவைக்கு உதவாப்

# பெற்றவள் 'பாசம்' மற்றவளுக்குண்டோ?

பேச்சு என்று காமராஜர்கள் கூறிவிடுகின்றனர். இந்த நிலையிலேயே, டில்லியில் உள்ள ஏடு, தீ பட்டது போலத் 'தகதக'வென ஆடி, தடி எடு! தடைபோடு! தடைபோடு! என்று கொக்கரிக்கிறது. தம்பி! நீயும் நானும் விரும்புகிறபடியும் நாட்டில் நல்லோர் பலரும் எதிர்பார்க்கிறபடியும், பொதுத் தேர்தலிலே நமக்குச் சிறப்பான வெற்றி கிடைத்து, நாம் ஆட்சி மன்றத்திலே அமர்ந்து, நமது உரிமை முழக்கத்தை நடாத்தினால் ஏ! அப்பா! இந்துஸ்தான் டைம்ஸ் போன்ற ஏடுகள் என்ன பாடுபடுமோ என்று எண்ணும்போதே எனக்குச் சிரிப்பு வருகிறது. இந்த அரிய வாய்ப்புக்காக நாம் அரும்பாடுபடும்போது, 150 ரூபாய்க்காக இதுகள் ஆலாய்ப் பறக்கின்றன, என்று நம்மவர்களிலேயே சிலர் கூறுவது கேட்கும் போது, நெடுந் தொலைவிலிருக்கிற இந்துஸ்தான் டைம்சுக்கும் புரிகிறதே இவர்களுக்கு ஏனோ வயிறு எரிகிறது என்றெண்ணி ஆயாசமடைகிறேன்.

நாங்கள் எவ்வளவு அரும்பாடுபட்டு சில வேளைகளில் கனிவு காட்டி மகிழச் செய்கிறோம் மற்றும் சில வேளைகளில் உருட்டுவிழி காட்டி மருளச் செய்கிறோம். எனினும் எல்லாம் எதன் பொருட்டு? நாம் ஒன்றாக வாழலாம். ஒரே நாடாக இருக்கலாம். ஓரரசுக்குள் இருந்திடலாம். தனித்தனி நாடுகள் தனித்தனி அரசுகள், வேண்டாம், கவி பாடியும் கதை கூறியும் நாங்கள் இதனைத்தானே எடுத்துக் கூறுகிறோம். ஒற்றுமைக்காக ஓயாது உழைக்கிறோம், ஏன் உமக்கு மட்டும் இந்த உயர்ந்த நோக்கம் ஏற்படவில்லை, எதனாலே உமக்கு மட்டும், பேதபுத்தி, பிளவு மனப்பான்மை ஏற்படுகிறது. கங்கைக் கரைக்கும் காவிரிக் கரைக்கும் பேதம் ஏன் காணவேண்டும்? காசி, காஞ்சி என்று ஏன் பிரித்துப் பிரித்துப் பேசுகிறீர்கள். எல்லாம் பாரதநாடு என்று பரிவுடன் எண்ணிடலாகாதா? என்று தலைவர்கள் பேசத்தான் செய்கிறார்கள்—கேட்கும்போது சிற்சில வேளைகளிலே எனக்குக்கூடத் தம்பி! நாம்தான் ஒரு வேளை தவறாக நடந்துகொள்கிறோமோ, வீணான பேத புத்தி நம்மைப் பிடித்தாட்டுகிறதோ, ஒற்றுமையின் மேன்மையை, ஓரரசின் உன்னதத் தன்மையை, ஒரு பெரும் நாடு என்ற திட்டத்தின் அருமை பெருமையை அறிந்து போற்றிடும் அறிவற்றுப் போனோமோ, என்றெல்லாம் தோன்றச் செய்கிறது. எனினும் மறுகணம், நம் நாட்டின் இயல்பும் அதற்கேற்ப வளர்ந்துள்ள வரலாறும், அதன் பயனாக நாம் பெற்ற பெருமைகளும் வந்து நிற்கின்றன, "ஏடா! மூடா! என்னை மறந்திடத் துறந்திடத்தக்க நிலையிலா உன் மூதாதையர் காலமுதற் கொண்டு உன் காலம் வரையிலே நான் வாழ்ந்து வந்து கொண்டிருக்கிறேன்—இயற்கை எழிலும் வளமும் ஈந்த என்னை, உன் அன்னை என்று, ஏற்றுக்கொள்ளவுமா உனக்குக் கூச்சம் ஏற்படுகிறது! உனக்கென்று ஓர் தனி இயல்பும் தனிவாழ்வு முறையும், கிடைத்திட அல்லவா, பாலூட்டிச் சீராட்டி வளர்த்து வந்தேன்! புன்னகை பூத்து நிற்கும் பூவையரெல்லாம் தாய் ஆவரோ? அவரிடம் பகை கொள்ளச் சொல்கிறேன் இல்லை! அவர்கள் அன்புடன் உன்னை அழைத்திடும்போது, அருவருப்பு அடைந்து வெறுத்து ஒதுக்கிவிடு என்று பேசினேன் இல்லை! ஆயிரம் கனிவு காட்டலாம் அம்மையே! எனினும் இதோ என் அன்னை! என்று பெருமையுடன் என்னைச் சுட்டிக் காட்டிடவா நீ தயக்கமடைய வேண்டும்! மதியற்றவனே! நேசம் வேறு, தாய்ப் பாசம் என்பது வேறு! கன்னல் மொழி பேசக்கூடும் மற்றவர். உன் தாய் சில வேளைகளிலே கடிந்துரைக்கக் கூடச் செய்வாள்—எனினும் 'தாய் அன்பு' என்பது தனியானதல்லவா—பிற எங்கும் பெற முடியாததோர் பேரன்பு அல்லவா! பெற்ற மனம் கொண்டிடும் பாசத்தை வேறு எங்கு காண இயலும்! இதனையுமா கற்பிக்க வேண்டும்? கடுவனிடமும் கொல்லும் புலியிடமும் கூடக் காண்கிறோமே இதனை. கருத்தற்றவனே! உன்னிடம் அகமும் புறமும் அளித்து, அணி ஆரமும் மேகலையும் தந்து, அறநெறியும் பிற பெருமைகளையும் தந்து, அழகியதாய் விழுமியதாய் உன வாழ்வு அமைவதற்கான வாய்ப்புகளைத் தேடித் தேடித் தந்து, நீ ஏற்றம் பெற்று, கொற்றம் நடாத்தி, ஏறுநடை போட்டு எங்கணும் சென்று, என் வீரமும் அறிவும் எனக்கு என் அன்னை அளித்தாள்! என்று கூறி எனக்குப் பெருமை தேடித் தருவாய் என்று பார்த்தால், பெற்றவளை மறந்திடத் துணியும் பேதையே! கற்றதை மறந்திடும் கசடனே! என்னை மகனாக்கிக்கொள்ள ஒரு மகராசி, அழைக்கிறாள்—அவள் தன் வயிற்றில் பிறக்காதவர்களாயினும் வாஞ்சனை காட்டுவதாக வாக்களிக்கிறாள்—உச்சி மோந்து முத்தமிட்டு, உன் தாயாக நான் இருக்கிறேன்! உனக்கும் உன்போலப் பல பிள்ளைகட்கும் நான் 'தாய் வேலை' பார்க்கும் பேராவல் சுரந்திடும் உள்ளம் கொண்டேன், எனவே உத்தமனே! உன் தாய் என்று அவளையும் இவளையும் காட்டி அழாதே! நான் தாயானேன், நீ என் மகனானாய், என்று அழைக்கிறாள். நான் இனி அந்த அம்மைக்கு மகனாகிவிடுகிறேன், தாயே! விடைகொடு! என்று துணிந்து என்னைக் கேட்கிறாயே, பெற்ற வயிறு பற்றி எரிகிறதே! அந்த வேளையிலும், உன்னைப் பாவி! பழிகாரா! படுநாசமடைவாய்! என்று கூறவும் மனம் கூசுகிறதடா, பாலகனே! என்னைப் பார்! என் தாய்! என்று நீ கூறிப் பெருமைப்படத்தக்க நிலையில் நான் இல்லையா...என்னிடம் என்னடா மகனே! குற்றம் கண்டாய்? என்னை வெறுத்துவிட்டு வேறோர் வேற்றுச் சீமையாளிடம் 'தத்து' போகவேண்டிய நிலையா வந்துற்றது? நான் என்ன நீ பசியால் துடித்து, பதறிக் கதறிடும்போது உன் முகத்தையும் பார்த்திடாமல், என் சுகத்தைக் கவனித்துக் கொண்ட மாபாவியா? உன்னை மாடாய் உழைக்கச் செய்து, நான் உலவி மகிழ ஒரு மாடி கட்டிக் கொண்டேனா! உழைப்பால் நீ ஓடானாலும் பரவாயில்லை, எனக்கு ஓர் உல்லாச ஓடம் வேண்டும், அதனை நான் களிப்புக் கடலில் செலுத்தி


அடுத்த இதழில்

அறிஞர் அண்ணா
அவர்களின்

சுகஸ்தான்வாசி.....

என்ற தம்பிக்கு மடல் இடம்பெறும்.

# என் நாடு! என் மொழி! என் இனமன்றோ!

மகிழப் போகிறேன் என்று செப்பிய வன்னெஞ்சக்காரியா! என்ன குறை கண்டாயடா மகனே! புதிய தாய் தேடிட வேண்டிய விபரீதம் நேரிட்டதா! மகனே! மகனே! மதி இழந்தனையோ! மயக்கமுற்றனையோ! பேதை மகனே! எதனையும் பெறலாம், அதற்கும் ஓர் வழி கிடைக்கும், ஆனால் அன்னையின் அன்பு என்பதனை, அறியாச் சிறுவனே! விலைபோட்டு வாங்க இயலுமா! அன்னையின் அன்பு, பெற்றவள் பாசம், மலிவு விலைக்குத் தருகிறோம், வருக! பெறுக! என்று யாரோ அங்காடியில் கூவிக் கூவி விற்பதாகக் கூறுகிறாயே! விளையாட்டுப் பருவத்தினன் நீ எனினும் கூடுகட்டி வாழும் குருவிகளைப் பார்க்கத் தெரியுமே உனக்கு—தாய்க் குருவியிடம்தானே குஞ்சுகள் தீனியைக் கேட்கின்றன — ஊட்டப் பெறுகின்றன! மடியிலே பாலைச் சுமந்து நிற்கும் பசு எதுவோ அதுவே நமக்குத் தாய் என்று ஊட்டிடச் செல்லும் கன்று, நீ பார்த்ததுண்டா! ஏடுகள் புகட்டுவதைக்கூடக் கவனிக்க வேண்டாம்; பக்குவம் வேண்டும் அதற்கு! கண்ணுள்ளோர் காணக்கூடிய காட்சிகளடா இவை—குருவிக் கூட்டிலே காணப்படும் குடும்ப பாசமும், துள்ளிடும் கன்றுக்குப் பாலும் அளித்து பரிவுடன் உடலை நாவினால் நீவியும் விடும் தாய்ப்பசுவின் பாசம்!! இந்தக் காட்சிகள் போதுமே, தாய் உள்ளத்தைத் தாயிடம்தான் பெற முடியும் என்ற உண்மையை உணர்த்த!" என்றெல்லாம் தம்பி! தாயகம் கேட்கிறது! நான் காணுகின்ற வயலும் அதற்கு வளமூட்டும் நீர் நிலையங்களும், அந்த வளத்தை விளக்கக் குலுங்கிடும் மணியும் கனியும், அவை தமைப் பெற உழைப்பு நல்கிடும் உத்தமரின் வியர்வையும், குன்றும் குளமும், கூத்தும் பாட்டும், மக்களின் மாண்பும் பிறவும், எல்லாம் எனக்கு இதனைத்தான் காட்டுகின்றன! உனக்கு மட்டுமென்ன, நீயும் இதே எண்ணம்தான் பெறுகிறாய்!!

தம்பி! எனக்கும் உனக்கும் காமராஜருக்கும் என்று கூட வேண்டுமானால் சேர்த்துக்கொண்டே பேசுவோம், தேசிங்குராஜன் என்ற உடனே சுரக்கும் வீர உணர்ச்சி, வங்கத்திலும் கலிங்கத்திலும் ஏற்பட முடியுமா? பாக்தாதிலும் டமாஸ்கசிலும் எப்படி தேசிங்கு ராஜன் கதை கேட்டால், வியந்து பேசுவரோ, அவ்வளவுதான் கல்கத்தாவிலும் கான்பூரிலும்! கட்டபொம்மன் என்றதும் இங்கு தோள் பூரித்து, மாற்றானின் தாள் வணங்கமாட்டேன், என் கரத்தில் வாள் உண்டு! என்று ஆர்த்தெழத்தக்க வீரம் நமக்கு எழுவதுபோல, பிற எங்கு காண முடியும்? பாஞ்சாலங் குறிச்சியின் வீரக் காதையைக் கூறினால், பாஞ்சாலத்தில உள்ளவர்கள் மனதிலே சொந்தம் எழாதே! வியப்பு தோன்றக்கூடும்! சுவை மிக்க வீரக் கதை கேட்டோம் என்ற மகிழ்ச்சி பிறக்கக்கூடும்! எனக்குத் தம்பி! சாதாரணமாக நெல் காணும்போது ஏற்படும் நம் பொருள் என்ற உணர்ச்சி கோதுமையைக் காணும்போது ஏற்படமாட்டேனென்கிறதே, என்ன செய்வேன்!

நம் நாடு—நம் இனம்—நம் நாட்டு இயல்பு—நமது வரலாறு—நம் நாட்டு வீரக் காதைகள்—நம் நாட்டு எழில்—நம் நாட்டு முறைகள்—என்பன, தம்பி! தாயிடம் சேய்கொள்ளும் பாசம் போன்றது. இயற்கையாகச் சுரப்பது, இந்தப் பாசம், பெற, தம்பி! எத்தனை எத்தனை தலைமுறைகளாயின என்று எண்ணிப் பார்! காவிரி குறித்தும், தமிழகத்து வீரக் காதைகள் குறித்தும், இந்நாட்டுக் குன்று குறித்தும் நம்மவர் கொண்டிடும் கொள்கை குறித்தும், எத்தனை எத்தனை தலைமுறைகளாகப் பேசிப் பேசிப் பேசி, அந்தப் பாசம் நிலைத்து நிற்கிறது!

சேரன் செங்குட்டுவன் கால முதற்கொண்டு சொல்லிச் சொல்லிச் சுவை ஊறி ஊறி, நமக்கென்று ஓர் சுபாவம் அமைந்துவிட்டது—அதனை சுப்பிரமணியனார் பார்த்து சூ' மந்திரக் காளி! ஓடிப் போ! என்று சொல்லுவாராம் அந்த 'பாசம்' ஓடியே போகுமாமே! இந்தக் கேலிக் கூத்தை என்னவென்று சொல்வது!

நம் நடிகமணி டி. வி நாராயணசாமி, 108 - நாட்கள் சிவலீலா நாடகத்தில் சிவபெருமான்வேஷம் போட்டார்—பித்தளைப் பாம்புகள், கிரீடம்—ஏகப்பட்ட 'பாரம்—அந்தப் பழக்கத்தில், காலை வேளைகளிலேகூட, அந்த நாடகம் முடிந்து பல நாட்களுக்குப் பிறகும் நண்பர் நாராயணசாமி என்னிடம் வந்து பேசிக்கொண்டிருக்கையில், 'பாரம்' சுமந்துகொண்டிருக்கும் தோற்றமே இலேசாகத் தென்படும்! தம்பி, தாய்நாட்டுப் பாசம், நாராயணசாமி சுமந்ததுபோன்ற பாரம் அல்ல — அதுதான் தேசியம் — பாரம்பரியம் என்கிறார்களே அது. அதனை விலங்குகளும் அடியோடு இழந்துவிட முடியுமா என்பது ஐயப்பாடுதான்—நாம் எங்ஙனம் அதனை இழந்துவிட முடியும் — அமைச்சர்கள், அதனை இழந்தால்தானே எமக்கு அமைச்சர் வேலை கிடைக்கிறது என்று வாதாடக்கூடும் — தம்பி! அது அவர்கள் கீழ் நிலை சென்றுவிட்டதைக் காட்டுவதாகுமே தவிர, நாட்டுப்பற்று எனும் மாண்பு பொருளற்றது என்பதையா காட்டிடும்!

தலைமுறை தலைமுறையாக வளர்ந்து நமது குருதியுடன் கலந்துள்ள தாய்நாட்டுப் பாசத்தை, ஒரு உத்தரவு பிறப்பித்து ஒழித்துவிட முடியும் என்று எண்ணுகிறார்களே, இவர்களை என்னென்று கூறுவது!

சின்ன வயதிலே சந்தைப் புறத்திலே காணாமற்போய்விட்ட குழந்தை, வேற்றாரிடம் வளர்ந்து, பெரியவனானாலும், பிறகோர் நாள், உண்மை தெரிந்ததும், தாயின் பாதத்தைத் தன் கண்ணீரால் கழுவிடக் காண்கிறோம் — கதைகளில்! தலைமுறை தலைமுறையாக தொல்காப்பியரும், வள்ளுவரும், இளங்கோவும் காக்கைப்பாடினியாரும், சீத்தலைச்சாத்தனாரும் கோவூர் கீழாரும், கணியன் பூங்குன்றனாரும் கபிலரும் திருத்தக்கரும், நக்கீரரும், நாகனாரும், நச்சள்ளையாரும், (மற்றவர் பற்றிய முறையான பெயர் வரிசையை நமது நாவலரிடம் கேட்டுப் பெறுக) ஊட்டி வளர்த்து, உருவாக்கி வைத்துள்ளதை ஊராள வந்தவர்கள் உத்தரவுபோட்டு

---

**நம்பிக்கை!**

ஏழைகளுக்கு நம்பிக்கையைத் தவிர வேறு மருந்தில்லை.

—ஷேக்ஸ்பியர்,

விழிப்போடிருப்பவர்கள் காணும் கனவுதான் நம்பிக்கை.

—பிரையர்.

நம்பிக்கை ஒரு மயக்கம். எந்தக் கையும் ஓர் அலையையோ, ஒரு நிழலையோ பற்றிக்கொள்ள முடியாது.

—விக்டர் விஹ்கோ.

# எழிலகம் ஆயினும், தமிழகம் ஆகுமா?

உருக்குலைத்துவிடுவதாமே! இப்படியொரு 'உற்பாதம்' நேரிட விடலாகுமா!

எனவேதான் தம்பி, பாரதநாடு—இந்தியா—இந்தியர்—என்று இவர்கள் இட்டுக்கட்டி இதுகாலை திணிக்க விரும்பும் போலித் தேசீயம், முளைவிட மறுக்கிறது. நீண்ட நெடுங்காலமாக நமது பரம்பரைக்குக்கிடைத்து கண்ணீரும் செந்நீரும் வியர்வையும் அதற்கு அளித்து செழிப்புறச் செய்து, எந்த இயல்பு—தாய் நாட்டுப்பற்று தேசீயம் — நம்மிடம் குருதியிற் கலந்திருக்கிறதோ, அதனை அழித்திட முற்படுவது அறிவீனம் என்பது மட்டுமல்ல, ஆகாத காரியம், அடாத செயல் என்பதுடன், இவர்கள் எக்காரணம்பற்றியோ வெற்றி நிலை எய்தினாலும், இவர்கள் பிடியில் சிக்கிவிட்ட மக்கள், இருந்ததையும் இழந்து, புதியதோர் இயல்பும் பெருமல் ஏதுமற்றவர்களாக, பட்டியில் மாடென உழலவேண்டி நேரிடுமேயன்றி எமது! எம்மவர்! எமது இயல்பு! எம் வீரர்! எமது புலவர்! எமது நெறி! என்றுகூறிப் பெருமைப்பட, அறிவாற்றல் பெற முடியாததோர் நிலை பெறுவர்! நாடு இருக்கும், அதிலே மக்கள் இருப்பர்—ஆனால் இரண்டினையும் ஒன்று ஆக்கிடும் பாசம்—பற்று—தேசீயம்—இருக்காது!! வீட்டிலே இருக்கும்போது, நம்முடன் இருப்போரைவிட, அதிகமான அளவில்தான் ஆட்கள் இருக்கிறார்கள் இரயில் பயணத்தில் வீட்டிலே காணப்படுவதைவிட சிற்சில வேளைகளிலே இரயிலில் குதூகலமும்கூடக் காணப்படும் — எனினும் அதிலே செல்லும் எவரும் — இரயிலைத் தமது வீடு என்று கொள்வதில்லையே!! சிறு குடில் எனினும் அதனிடம் ஏற்படும் பாச உணர்ச்சி புது மெருகுடன் கூடியதாக இருப்பினும், இரயிலிடம் ஏற்படுகிறதா! புதிய போதகர்களோ, குடிலையும் அழித்துவிடுங்கள், நாங்கள் அமைத்திருக்கும் கூடாரத்தை உமது மனையென்று கொள்ளுங்கள் என்கின்றனர்! முடியாது ஐயன்மீர்! ஏனெனில் அது முடியக்கூடிய செயலல்ல என்கிறோம். விடாதே! பிடி! சிறையில் அடை! என்று இந்துஸ்தான் டைம்ஸ் கொக்கரிக்கிறது!

இதிலிருந்து தம்பி, நான் துவக்கத்தில் எடுத்துக் காட்டியபடி, அங்கு வரையில், நமது கழகம் மணம் பரப்பிவிட்டிருக்கிறது என்ற பேருண்மை தெரிகிறது.

இதுபோல, எங்கும் நமது கழக நிலை தெரிந்திட வேண்டும் என்பதற்காகவேதான், தம்பி, நானும் துணிந்து ஆங்கிலக்கிழமை இதழ், ஜனவரித் திங்களிலிருந்து வெளியிடுவது என்று ஏற்பாடுகளைத் துவக்கி விட்டேன். சென்ற ஆண்டு, எப்படியும் இந்த இதழ் துவக்கி நடத்துவது என்று, ஏற்பாடுகளை என் நண்பர் S. S. P. லிங்கம் அவர்களைக்கொண்டு துவக்கினேன். அவரும் மிக ஆர்வத்துடன் பணியாற்றினார்—ஆனால் என் சுபாவம்தான் உனக்குத் தெரியுமே, புதிய பொறுப்பாயிற்றே! எப்படி இதனையும் கவனித்துக்கொள்வது என்ற அச்சம் குடைந்தது. மெத்தச் சமாதானம் சொல்லி நண்பர் லிங்கத்தை, இப்போதைக்கு வேண்டாம், பிறகு பார்ப்போம் என்று கூறினேன். இப்போது சென்னையிலிருந்து நடத்துவதைவிட காஞ்சியிலிருந்து வெளியிடுவது, சிறிதளவு வசதி தரும் என்ற எண்ணத்துடன், ஏற்பாடுகள் செய்துவருகிறேன். தம்பி! நான் அதற்காகக் கேட்கும் ஆதரவு—நன்கொடை அல்ல—துவக்கத்திலேயே எனக்குத் தெம்பும் தைரியமும் வருவதற்காக, ஆயிரம் சந்தா தேவை என்று கேட்டேன்.

நான் இதுபோலக் கேட்கும்போது, தம்பி, நீ மட்டுமல்ல கேட்டுக் கொண்டிருப்பது.

மாற்றுக் கட்சியினர் கேட்டுக் கொண்டுள்ளனர்; சர்க்காரும் உற்றுக் கேட்கிறது.

என் வேண்டுகோளைத் தம்பி, நீ அன்புடன் அக்கறையுடனும் நிறைவேற்றி வைத்தால், உனக்கும் எனக்கும் உள்ள உறவு எவ்வளவு உயர்தரமானது என்பதை அறிவதுடன், நமது கழகத்துக்கு எத்துணை செல்வாக்கு இருக்கிறது, காரியத்தை வெற்றிகரமாக்கும் ஆற்றல் நமது கழகத் தோழர்களிடம் எவ்வளவு இருக்கிறது என்பதை, மாற்றுக்கட்சியினரும், சர்க்காரும் அறிவர்!

உன் அன்பும்அக்கறையும், ஆங்கிலஏடு பொறுத்த வரையில், நான் மகிழத்தக்க வகையில் இன்னும் உருவெடுக்கவில்லை என்பதைக் கூறிக்கொள்ள வருந்துகிறேன். எனினும் சொல்லிவைக்கிறன்; நிலைமையை அறிந்து விரைவினில் ஆதரவு திரட்டி அளித்திடும் ஆற்றல் உன்னிடம் நிரம்ப இருக்கிறது என்று அறிந்தவன், என்பதனால்.

இந்துஸ்தான் டைம்ஸ் போன்ற பல, வளமான ஆங்கில ஏடுகளை மட்டுமே வெளி உலகு காண்கிறது—எனவே திராவிடம் தெரிவதில்லை.

டாக்டர். மு. வ. கூறுவதுபோல, சென்னை அமைச்சர்களையோ அச்சம் தடுக்கிறது; எப்போதேனும் அவர்கள் துணிந்து நீதி வழங்கும்படிக் கேட்டாலோ, மிரட்டலும் விரட்டலுமே கிடைக்கிறது. பல்கலைக் கழகத்தினரின் நியாயமான கோரிக்கையையும் டில்லி புறக்கணித்து விடுகிறது, மதிப்பளிக்க மறுக்கிறது. இப்படி ஒவ்வோர் முனையிலிருந்தும் டில்லியின் தாக்குதல் கிளம்புவது கண்டு, மனம் நொந்துபோயுள்ள நம்மையோ நாட்டிலே நடமாடவிடுவதே கூடாது, ஒழித்துக்கட்ட வேண்டும் என்று டில்லியிலுள்ள இந்துஸ்தான் டைம்ஸ் கூறுகிறது. இந்நிலையில், நமது கழகத்தைப் பிறர் அறிவதற்காகவாவது ஒரு ஆங்கில ஏடு—கிழமை இதழாவது வேண்டும் அல்லவா!

இதை அறிந்துள்ள உனக்கு ஆதரவு திரட்டி உடனே அனுப்பிவைக்கும்படி, தம்பி, நான் பன்னிப் பன்னிக் கூறத் தேவையில்லை என்று எண்ணுகிறேன்.

கலை, கல்வி, அரசியல், எனும் மூன்று துறைகளிலே, டில்லி வழங்கியுள்ள மிரட்டல் விட்டல் கண்டோம்—இனித் தம்பி, தொழில் துறையிலிருந்து கிளம்பும் ஒரு துயர கீதம், கேள். அதைக் கூறு முன்பு, நமது நிதி அமைச்சர் உருவத்தையும் உரையையும் நினைவிலே கொண்டுவந்து நிறுத்திக்கொள்ள வேண்டுகிறேன்!! அடுத்த, கிழமை அந்தத் துயரகீதம் பற்றிக் கூறுகிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

(25—11—56 திராவிட நாடு இதழில்)

# வள்ளல் பேகன்

— இறைவன் —

மதிமுட்டும் மலைமீது கொண்டல் முட்டும்!
மழைகொட்டும்! மலையருவித் தரையில் கொட்டும்
நதிகொட்டும் வளப்பத்தால் வறுமை பாய்ந்து
நகைகொட்டும் இன்பங்கள் முரசு கொட்டும்!
நிதிகொட்டும்! நிறைகொட்டும்! மக்கள் நெஞ்சம்
நிம்மதியில் கைகொட்டும்! அந்த நாட்டில்
உதிக்கட்டும் இன்பங்கள் என்று சொல்லி
உரங்கொட்டி வளர்த்தவன்தான் பேகன் என்பான்

மரம்தாவிக் குரங்குக்குப் பழக்கம் உண்டு!
மலர்தாவி வண்டுக்கும் பழக்கம் உண்டு!
கரம்தாவிச் செல்கின்ற பழக்கம் கூட
காசுக்கும் தாசிக்கும் உண்டு! அந்தப்
புரம்தாவிச் செல்கின்ற பழக்கம் எல்லா
போர்வேந்தர் களுக்குண்டு! ஆனால் அக்கோ
புரம்தாவி அப்புறமும் தாவு கின்ற
புதுப்பழக்கம் பேகனுக்கோ நிரம்ப உண்டு!

மதுப்பழக்கம் விடுவதில்லை! பழகி விட்டால்
மாதுபழக் கம்கூட விடுவ தில்லை!
புதுப்பழக்கம் தசைப்பழக்கம்! அதிலே கூடப்
புகுந்துவிட்டால் தெரிவதில்லை கால நேரம்!
இதுபழக்கம் பரத்தையர்பால் பேக னுக்கு
இவன் மனைவி கண்ணகிக்கோ கண்க லங்கு
வதுபழக்கம்! சிலம்புக்கண் ணகிபோல் கண்ணீர்
வடிப்பதிலே இவளுக்கும் பழக்கம் உண்டு!

களம்நாடிச் சென்றவனின் மனைவி போன்று
கண்ணீரை உகுத்தழுவாள்! கொதிஎண் ணெய்கொப்
புளம்நாடிப் பெற்றவள்போல் இரவு நேரப்
பொழுதெல்லாம் துடித்தழுவாள்! இவள்ஆ சைஅப்
பளம்போன்று நொறுங்கிவிடக் கண்ணீர் சிந்திப்
பாவையவள் பதைத்தழுவாள்! இவளோ நீச்சல்
குளம்நாடிப் போவதில்லை! பூவைச் சிந்திக்
குழல்நாடி முடிப்பதில்லை! உறக்கம் இல்லை!

முள்கழிக்கும் கத்தியைப்போல் மூடர் செய்யும்
முறையற்ற செயல்அழிக்கும் புலவர்! நெஞ்சின்
உள்செழிக்கும் கருத்தையெல்லாம் பாட லாக்கி
உளம்தழைக்கத் தருகின்ற பரணர் என்பார்
கள்வழிக்கும் இதழ்பரத்தை நாடிச் சென்ற
காவலனைத் திருத்துதற்கு நினைத்தார்! பாடும்
புள்பழிக்கும் கண்ணகியின் நெஞ்சங் கொண்ட
புண்ஒழிக்கும் வேலையினைச் செய்ய லானார்!

வலைவிரித்துப் பணம்பறிக்கும் பரத்தை வீட்டு
வாயிலிலே காவலனைக் கண்டு நின்றார்!
"கலைவிரித்து வருவார்க்குப் பொன்னை வாரி
கால்மறையக் குவிப்பவனே! மேகக் கூட்டம்

அலைவிரித்து வரக்கண்டு மஞ்ஞை ஆட
அழகுதுகில் தந்தவனே! உன்ம னைவி
தலைவிரித்து அழுகின்றாள்! மனமி ரங்கித்
தருவாயா அவளுக்கு அன்புப் போர்வை!

அறப்பாட்டு வள்ளுவத்தைக் கற்ற பின்னும்
அகப்பட்டு விடலாமா பரத்தை கையில்!
புறப்பாட்டு பெற்றவன்நீ! இங்கே நீயும்
புறப்பட்டு வரலாமா? பெருமை வாழ்வுக்
கறைபட்டுப் போகாதா? புகழும், மாசுக்
கரம்பட்டுத் தீயாதா? மக்கள் எல்லாம்
குறைபட்டுக் கொள்ளாரா? நீசி லம்புக்
கோவலன்போல் இச்செயலைச் செய்ய லாமா?

குடிகளினைக் காப்பவன்நீ! கண்ணீர் சிந்தக்
குலமகளை விடலாமா? ஊமத் தம்பூச்
செடிகளினைத் தின்கின்ற காளை உண்டா?
சேறுறங்கும் அன்னமுண்டா? மாற்றார் ஏந்தும்
கொடிகளினைக் கொண்டுவந்து படைகள் தங்கக்
கூடாரம் அடிப்பவனே! ஆவி யர்தம்
குடிவந்த பெருமகனே! நீயும் உந்தன்
குலப்பெருமை யைஇறக்க முயல லாமா?

காட்டிற்குச் சென்றுபெருஞ் சித்தி ரன்போல்
கவிபாடிப் பெறுவேனே யன்றி; எந்தன்
பாட்டிற்கு உன்னிடத்தில் பரிசு வாங்கப்
பரத்தையில்லம் தேடியிங்கா வருவேன்? இன்றே
வீட்டிற்கு நீதிரும்பி வந்தால் போதும்!
வேறெதுவும் தேவையில்லை! இல்லை யேல்என்
பாட்டிற்கு நான்திரும்பிப் போவேன்! எந்தன்
பாட்டிற்குள் உன்பெயரோ இடம்பெ றாது!

தேரோட்ட வேபிறந்த இளஞ்சேட் சென்னி
சிறப்பிக்கப் பட்டான்என் பாட்டில்! என்றால்
பாராட்டப் பட்டவன்தான் பெருநற் கிள்ளி!
பாட்டாலே நெடுஞ்சேர லாத னையும்
நீராட்டி உள்ளேன்நான்! இப்போ துன்னை
நீராட்ட வந்துள்ளேன்! சாக்க டையால்
சீராட்டப் பட்டதெல்லாம் போதும்! ஏறி
சீக்கிரத்தில் தலைமுழுக வெளியி லேவா!

அறம்பிறழச் செய்யாதே! புலவர் கூட்டம்
அகன்றுவிடும் எட்டிமரம் நீயென் றெண்ணி!
முறம்பிறழப் புடைக்காதே! தானி யங்கள்
முற்றும்கீழ் சிந்திவிடும்! பண்பும் அஃதே!
திறம்பிறழ வாழாதே! மக்கள் உந்தன்
திசைதிரும்பிப் பாரார்கள்" என்றான்! கேட்டு
மறம்பிறழாக் கையுடை போன் வள்ளல் பேகன்
மனம்மாறி மனைநோக்கி நடக்க லானான்!

# சோஷலிசப் படி-தடை!

அன்புள்ள நண்பா!

பெங்களூரில் அடித்த புயல், டில்லித் தலைநகரில், புழுதியை வாரி இறைத்தது சென்ற கிழமை. பிரதமர் இந்திராவின் அடுத்தடுத்த செயல்கள், ராட்சசத் தன்மை வாய்ந்தனவாக மாறின. மொரார்ஜிதேசாய் பழிவாங்கப்பட்டாரா? இந்திரா ஏமாந்து போனாரா? தலைவர் அனைவரும் தாண்டிக் குதித்தார்களா? காமராசரின் பேச்சைக்கூட இந்திரா அம்மையார் எடுத்தெறிந்துவிட்டாரா? என்றெல்லாம் கேள்விகளை அடுக்கிக்கொண்டு, அனாவசியமான ஆராய்ச்சியிலீடுபட்டு, பொன்னான காலத்தைப் பொசுக்கிக்கொண்டிருக்கத் தேவையில்லை என்ற நிலைமையை ஏற்படுத்திவிட்டார் பிரதமர்.

இரண்டு நாட்கள்கூட முடியவில்லை. தமிழ் நாட்டுக் காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம், காமராசர் டில்லி விரைந்த செய்தி கேட்டு, எந்த நெருக்கடியையும் சமாளிக்கும் சர்வவல்லமை படைத்தவர் காமராசர்—அவர், இந்திரா, மொரார்ஜிக்கிடையே ஏற்பட்ட பிணக்கைத் தீர்த்து ஒரு சமாதான நிலையையுண்டாக்கி விடுவார் என்று நம்பிக்கைச் செய்தி சொல்லி இருக்கிறார். காமராசர், பிரதமரைச் சந்தித்து மீண்ட பின், காமராசர் முகத்தில்கூட 'நம்பிக்கை ஒளி' பிரகாசிக்கவில்லை என்ற செய்தி வந்துவிட்டது.

எப்படியோ, சூருவளியும் புழுதிப் புயலும் கிளம்பி அறிவுக் கண்ணுக்கு 'எரிச்சல்' ஊட்டிக்கொண்டிருந்த தன்மையை, பிரதமர், ராஷ்டிரபதியின் ஒரு அவசரச் சட்டத்தின் மூலம், ஒடுங்கச் செய்துவிட்டிருக்கிறார். அதாவது, இந்த நாட்டில் உள்ள 14 பாங்குகளை அரசுடைமையாக்கி அவசரச் சட்டம் பிறப்பித்ததன் மூலம், முன்னதாகக் கிளம்பிய எல்லா பிரச்னைகளையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டார்.

பாங்குகளைத் தேசியமயமாக்கிவிட்ட செய்தியின் மூலம், மொரார்ஜியையும், திணரவைத்து, காமராசரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி, சவானையும் சமாதானம் செய்து, எஸ். கே. பாட்டிலின் பாராட்டையும் பெற்றிருக்கிறார் பிரதமர்.

அதாவது, யார் யார் சஞ்சீவி ரெட்டியின் பெயரை வைத்து, தனக்குப் பெரிய தலைவலியைத் தந்துகொண்டிருந்தார்களோ, அவர்களையெல்லாம் பிரதமர் பாங்குகள் நாட்டுடைமை என்ற செய்தியைச் சொல்லி வாயடைக்கச்செய்து விட்டிருக்கிறார் என்றுதான் நம்ப வேண்டும்.

எப்படியோ, நண்பா, இப்போது இந்தியாவின் முக்கியமான 14 பாங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டு விட்டதாகப் பிரகடனப்படுத்தி விட்டார்கள். சட்டி ஓட்டையா என்ற ஆராய்ச்சிலீடுபடத்தேவையில்லை—கொழுக்கட்டை வெந்திருந்தால் சரி!

தன்னை எதிர்த்தவர்களின் வாயடைக்கச்செய்வதற்காகப் பிரகடனப்படுத்தியிருந்தாலும் சரி, நம்பிக்கையில்லா நிலையை நாடாளுமன்றத்துக்குள்ளே உருவாக்கிக்கொண்டிருந்தவர்களின் முயற்சியினைக் குலைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையானாலும் சரி, எது எதற்காக நடைபெற்றிருந்தாலும், இப்போது மக்களின் நீண்டநாள் கோரிக்கையின் ஒரு பகுதி நிறைவேற்றி வைக்கப்படுகிறது.

பாங்குகளை, நாட்டுடைமையாக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் நீண்ட நெடுங்காலமாகவே கேட்டுவந்திருக்கிறது; இதுபோலவே நாட்டில் கம்யூனிஸ்டுக் கட்சி உள்ளிட்ட பெரும்பான்மையான அரசியல் கட்சிகளும் கோரிவந்துள்ளன.

நெடுங்காலமாகக் கேட்டுவந்த கோரிக்கை—பெரும்பான்மையான எதிர்க்கட்சிகளும் ஒருமனதாகக் கேட்டு வந்த கோரிக்கை—காங்கிரசுக்கட்சிக்கேகூட உடன்பாடான ஒரு கொள்கை, இத்தனைக் காலம் தள்ளிப்போடப்பட்டு வந்து கொண்டிருந்த நிலைமையிலிருந்து மாறி, திடுதிப்பென்று இப்போது அவசரச் சட்டத்தின் மூலம் பிரகடனப்படுத்தபடுவானேன்? என்றெல்லாம்கூட வினாவெழுப்பித் திண்டாடிக் கொண்டிருக்கத் தேவையில்லை.

இப்போதுதான் அதற்குரிய வேளை வந்திருக்கிறது—கொள்கை வெளிப்படுத்தப்பட்டுவிட்டிருக்கிறது.

மொரார்ஜியிடமிருந்து நிதித்துறையைப் பறித்துக் கொண்டு, இந்த நாட்டின் முதலாளிமார்களது ஆத்திரத்துக்கு ஆளாகி இருக்கும் இதுதான் வேளையா என்று நீ கேட்க நினைத்தால், அது வீண்வேலையேயாகும்.

எப்படியோ, பிரகடனப்படுத்திவிட்டார்கள். எதிர்ப்புக் குரலும் ஒடுங்கிக் காணப்படுகிறது. ஒரு ஆச்சரியம்கூட விளைந்திருக்கிறது—

பாங்குகளை நாட்டுடைமையாக்கினால், காங்கிரசுக் கட்சியை உடைத்தே தீருவேன்.

என்று வேஞ்சினம் உகுத்த எஸ். கே. பாட்டில்கூட துணிவைப் பாராட்டியிருக்கிறார்!!

காங்கிரசுக் கட்சியின் மேல்மட்டத்திலிருக்கின்ற பெரும்பாலோரது ஆணவத்தை அழித்தொழிக்கும் ஒரு நடவடிக்கையாக இதனைத் தேர்ந்தெடுத்துக்கொண்ட பிரதமரின் துணிவைத்தான் பாட்டில் பாராட்டியிருக்கிறார். மற்றபடி, நாட்டுடைமைகளாகபாங்கிகள் கட்டுப்படுத்தப்பட்டு விட்டபின், இனிமேல் அவருக்குள்ள அரும் பணிகள்,

> காங்கிரசுக் கட்சிக்குள்ளே பிளவுகளை உண்டாக்கக்கூடிய வேலைத் திட்டங்களை ஆராய்வதும், செயல்படுத்துவதும் தான்!

இது காங்கிரசுக் கட்சியின் தலைவர்களுக்கு மட்டுமே உட்பட்ட செய்தியாகும். ஆகவே, எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும். பாங்குகள் நாட்டுடைமையாக்கப்பட்டு விட்டன! நாட்டு மக்களது வேட்கை, ஓரளவு தணிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், வடபுலத்திலே மெள்ள மெள்ள காலூன்றிக் கொண்டுவரும் ஜனசங்கமும், மசானியின் சுதந்திராக் கட்சியும் இதனை வன்மையாகக் கண்டித்திருப்பது மட்டுமல்லாமல், தலைமை நீதிமன்றத்திலே வழக்குகளும் தொடுத்து இடைக்காலத் தடையும் பெற்றிருக்கிறது. நீதி மன்றத்தின் இந்த தடையின் மூலம அரசுடைமைக் கொள்கை எந்த வகையிலும் மாறாது என்று பிரதமர் விளக்கி இருக்கிறார். எடுக்க வேண்டியுள்ள சில நடவடிக்கைகளை மட்டுமே கட்டுப்படுத்துவதாக பிரதமர் கூறுகிறார். அவர் கூறுவது சரியானது என்ற கருத்திலேயே இப்பிரச்னைபற்றி நாம் ஆராயலாம்.

பெரும் பணக்காரர்கள் இதனை எதிர்த்திருக்கிறார்கள். ஜே. ஆர். டி. டாட்டாவே எதிர்த்திருக்கிறார் பாரேன்! இதிலிருந்தே தெரியவில்லையா—இது நாட்டு மக்களுக்கு நன்மை விளைக்கக்கூடிய ஒரு திட்டம்—சோஷலிசச் சித்தாந்தம் கைகூடும் ஒரு வாய்ப்பு என்று!

டாட்டாவைப் பற்றி புதிய அறிமுகமே தேவையில்லை. அகில உலகப் புகழ் பெற்றுள்ள பல கோடிகளுக்கு அதிபதி; தொழிலதிபர். இந்தியத் துணைக்கண்டத்தின் பெரும் புள்ளிகள் பத்துப் பதினைந்து பேரில் இவரும் ஒருவர்: கம்யூனிஸ்டுகளைக் கேட்டால் சரியான புள்ளி விவரம் தருவார்கள். அவரே முன்வந்து இதனைக் கண்டித்திருக்கிறார் என்றால், மசானியோ, ஜனசங்கமோ வழக்குப்போடுவது என்பது வியப்புக்குரியதல்லதான்!

பொதுவாக, ஒரு துறை நாட்டுடைமையாக்கப்படுகிறது என்கிறபோது, அதன் வருவாயும், வளமும் நாட்டு மக்களுக்குப் பயன்படவேண்டும் என்றுதான் பொருளாகும். மக்களது நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கையும், பெரும் பணக்காரர்கள் சிலரது ஏகபோக வாழ்க்கைக்கு ஊறுண்டாக்கவே செய்யும் என்பது எதிர்பார்க்கப்பட வேண்டியதேயாகும். அந்த முறைப்படி, இப்போது அரசுடைமையாக்கப்பட்ட பாங்குகளின் இயக்குநர்கள்—உரிமையாளர்கள் பலரது ஏகபோகம் தடுக்கப்படுகிறது. டாட்டாவுக்கும், மசானிக்கும் கோபம் வராமல் எப்படியிருக்கும்?

கோயங்கா குழுவுக்குகூட, நாட்டுடைமையாக்குவது என்றால் அன்றிலிருந்து இன்று வரையில் ஒரு பயங்கரமான காரியமாக இருந்து வந்திருக்கிறது. தன் வலிமைவாய்ந்த செய்தி இதழ்கள் எந்த சக்தியை முழு வலிவு கொண்டும், இந்த நடைமுறையினை எதிர்ப்பதில் கங்கணம் கட்டிக்கொண்டுச் செயல்பட்டுவருகிறது. இதுபோலவே, செல்வச் சீமான்களுக்கென்றே நடைபெற்றுக்கொண்டுவரும் சில ஏடுகள், இதழ்கள்கூட வரிந்துகட்டிக்கொண்டு முன் வந்திருக்கின்றன—எதிர்ப்பினைக்காட்ட!

பாங்குகளை அரசுடைமையாக்குவதனால், இந்த நாட்டின் பொருளாதார வளம், ஏதோ தலைகீழாகமாறி விடப் போவதாகவும், தொழில் துறையில் புதிய ஒரு தேக்கம் ஏற்பட்டு, நசிந்து, நாட்டுக்குக் கேடுண்டாக்கி விடும் என்பது போலவும் செய்திகளைப் படைக்கத் தொடங்கிவிட்டன.

பாங்கித் தொழில் என்பது, இன்றைய வளர்ந்து வந்துகொண்டிருக்கும் நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகித்துக்கொண்டுள்ளவை என்பது மட்டுமல்லாமல், சில குறிப்பிட்ட பெரும்புள்ளிகளின் ஏகபோக ஆதிக்கமாவும உள்ளவையாகும்.

ஒரு அரசு தன் சட்டங்கள் மூலம், பாங்குகளின் ஏகபோக நடவடிக்கைகளையும், பொருளாதாரக் கொள்கைகளையும் கட்டுப்படுத்திவிட முடியும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள உண்மைதான் என்றாலும், அந்த சட்டங்களையும் மீறி, செல்வச் செழிப்பை தம் ஏகபோகத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பது இதுவரையில் கண்டறிந்த படிப்பினையாக இருக்கிறது. அவ்வாறான நிலையில், பாங்குகளின் மீதான கட்டுப்பாடுகளை மிகுத்துக்கொண்டே போவதானது, பாங்குகளின் செயற்பாடுகளை தடுக்கக்கூடும்; அல்லது குலைத்துவிடவும் கூடும். அப்போது விளைகின்ற பொருளாதாரக் கேடுபாடுகளைவிட, நண்பா, நாட்டுடைமையாக்குவதனாலேற்படுகின்ற கேடுபாடுகள் நிச்சயம் அஞ்சத்தக்கனவாக இருக்கமுடியாது.

நாடு சுதந்திரமடைந்த பிறகு, இந்நாட்டில் எத்தனை பாங்குகள் முறிந்துபோயிருக்கின்றன? அவற்றில் முதலீடு செய்திருந்தவர்களுக்கு 10 சதவீதம்கூட திரும்பக் கிடைக்காமல் போனவர்கள் எத்தனை ஆயிரம் பேர் இன்னமும இருக்கிறார்கள்!

நாட்டுடைமையாக்க வேண்டும் என்று கேட்கப்படுவதில், முதலில் அதற்கு அரசுப் பாதுகாப்பு வேண்டும் என்று பொருளுமிருக்கிறதல்லவா?

1. சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா
2. பாங்க் ஆப் இந்தியா
3. பஞ்சாப் நேஷனல் பாங்க்
4. பேங்க் ஆப் பரோடா
5. யுனைடெட் கமர்ஷியல் பாங்க்
6. கனரா பாங்க்
7. யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா
8. தேனு பாங்க்
9. சிண்டிகேட் பாங்க்
10. யூனியன் பாங்க் ஆப் இந்தியா
11. அலகாபாத் பாங்க்
12. இந்தியன் பாங்க்
13. பாங்க் ஆப் மகாராஷ்டிரா
14. இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்

ஆகியவை இப்போது நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பெற்றுள்ளன. இன்னும் 50 கோடிக்

கும் கீழான முதலீடுகளுள்ள பாங்குகள் இதிலே விதிவிலக்குப் பெற்றுள்ளன. மற்றும் அந்நிய நாட்டு வங்கிகள் சிலவும் விடப் பெற்றுள்ளன.

நாட்டிலுள்ள எல்லா பாங்குகளிலுமாக இப்போது முதலீடு செய்யப்பெற்றுள்ளதாகக் கிடைக்கின்ற தகவல் சுமார் 4,600 கோடியாகும். இவற்றில் மேலே கண்ட 14 பாங்குகளில் மட்டும் சுமார் 4000 கோடி முதலீடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. இது சுமார் 85 சதவீதமாகும்.

சுமார் நாலாயிரம் கோடி ரூபாய், இயக்குநர்களுடையவும், முதலீட்டார்களுடையவுமானதாகும். பெரும் பகுதியும் முதலீடு செய்துள்ளவர்களினுடையது. இந்த தொகைக்கு, அரசு தன் உத்திரவாதத்தைத் தந்துவிட்டது என்பது முதலாவதாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

சுமார் 4000 கோடி முதலீட்டோடு, நாடெங்கும் பரவலாகச் செய்யப்படுகின்ற தொழில், எத்தனை கோடி லாபமுடையதாக விருக்கும்? அந்த லாபத் தொகை சிலரிடம் குவிவதைத் தடுத்து விட்டிருக்கிறது என்பது அடுத்ததாகும்.

இதன் மூலம் கிடைக்கின்ற வருவாயை, இனி அரசே எடுத்துக்கொள்ளும் என்பது மூன்றாவதாகும்.

இந்த மூலதனம் கொண்டு, இதுவரையில் வழங்கப்பட்ட கடன்—முதலான தொழில் கொள்கைகளுக்கு வழங்கப்பட்டவைபோக, எஞ்சியவை, மேலும் தொழில் துறைக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்ய முடியும்.

இவையெல்லாவற்றையும், இதுவரையில் தனியாரே செய்து வந்திருக்கிறார்கள் என்றாலும், தொழில் என்ற முறையில் அதன் கொள்ளை லாபங்களையும் தனியாரே ஈட்டி வந்திருக்கிறார்கள் என்பதை எதிர்ப்பாளர்கள்கூட மறுக்கமாட்டார்கள். அந்த கொள்ளை இப்போது தடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காகவாவது பாங்குத் தொழில் நாட்டுடைமையானதை வரவேற்றாக வேண்டும்.

சோஷலிசம் பேசப்படுகிற ஒரு நாட்டில், அதன் மூலமே ஏழை எளிய மக்களுக்கு நல்வாழ்வளிக்க முடியும் என்று கொள்கைகள் வகுத்துக்கொண்டு செயல்பட்டுவரும் ஒரு நாட்டில் எந்தத் தொழிலாகவிருந்தாலும், அந்தத் தொழிலின் மூலம் கிடைக்கிற கொள்ளை லாபத்துக்கு முடிவு இல்லையென்றால், வரம்பு இல்லையானால், சோஷலிசம் — என்பது கேலிக்கூத்தில்லவா?

பணத்திமிங்கிலங்கள் எந்தக் காலத்திலாவது சோஷலிசக் கொள்கைக்கு உடன் படுவார்களா? உடன்பட முடியுமா? டாட்டாவும், பிர்லாவும், பஜாஜூம், கோயங்காவும், சோஷலிசக் கொள்கையை ஆதரித்துப் பிரசாரம் செய்ய முடியுமா? அதனாலேதான் அவர்கள் எதிர்ப்புக்குரல் தருகின்றனர். கண்டனக் கட்டுரைகள் வெளிவருகின்றன.

இப்போதைய நிலைமையை, தொழில் இணக்கம் கெட்டுவிடும்என்றும், பொருளாதாரம்பாழ்பட்டு இந்திய நல்வாழ்வு புதை குழிக்குப்போகும் என்றும் வலிந்த முறையிலே எடுத்துக்காட்டுக்களைத் தந்து விளக்க முனைந்திருக்கிறார்கள்.

4000 கோடி ரூபாய் முதலீட்டு மூலதனத்துக்கு உத்திரவாதம் கிடைக்கப் பெற்றிருக்கிறது என்பதையோ, இதன் வருவாய் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் லாபம் அரசுக்குச்சேரும் என்பதையோ, இன்னும் பரவலான முறையில் தொழில் துறைக்கும், விவசாயத் துறைக்கும் கடன் வசதிகள் கிடைக்க வாய்ப்புண்டு என்பதையோ மறைக்க முயல்கின்றனர் அவர்கள்.

தனியார் துறையில் இருக்கும்போது மட்டும் கடன் திரும்பி வசூலாவதற்கான வழிகள் நுணுக்கமாக ஆராயப்படும் என்பதும் அரசுத் துறையில் அது ஆராயப்படமாட்டாது என்பதும் நொண்டிச் சமாதானங்கள் ஆகும்; போலிக் காரணங்களாகும்.

முழுக்க முழுக்க இதனை வரவேற்றிருப்பவர்கள் பாங்கித் தொழிலில் உள்ள ஊழியர்களேயாவர். ஊழியர்கள் இனி அரசு ஊழியர்களுக்குள்ள எல்லா அந்தஸ்தினையும் அடைவார்கள் என்றாலும், முதலாளிகளை விட தொழிலில் முன் நின்று நடத்தி லாப நட்டத்துக்குக்கணக்கு வைத்துக்கொண்டிருப்போர், அரசுடைமையாவதின் தீமையை மறைத்துவிடுவார்கள் என்று நம்ப முடியுமா? அல்லாமல் வரவேற்றிருப்பது எதனைக் குறிக்கிறது?

பாங்கு நிர்வாகிகளில் பெரும்பாலோர் வரவேற்கவே செய்கிறார்கள். ஒரு சிலர்—ஒருவர் இருவர்தான்—நிர்வாகிகள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர். என்ன பொருள் இதற்கு?

கொடுக்கல், வாங்கல் போன்ற எந்தவொன்றும், எந்தக் காரணத்தாலும் தடைபட, சீர்குலைவுக்கு ஆளாகக் காரணமில்லை. வீணான பீதிக்கு மக்களை அழைத்துச் செல்வது விரும்பத்தக்கதாக இராது.

ஆனால் நாட்டுடைமையாக்கப்பட்ட துறைகள் பெரும்பாலும் இழப்பில் இருந்து கொண்டிருக்கிறது என்பதனையும் மறைத்துவிடக் கூடாது. இவையனைத்தும் நட்டமடைவதற்குரிய முக்கியக் காரணம், போதிய நிர்வாகத் திறமையும், அக்கறையற்ற தன்மைகளுமே என்று கூறப்படுவதனையும் அலட்சியம் செய்து விடமுடியாது.

அரசுடைமையாக்கிக்கொண்ட பாங்கு நிர்வாகத்தை எப்படி நிருவகிப்பது என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. எப்போதும்போல், ஒரு அரசு அதிகாரியின் நியமனம் என்ற வழக்கத்தையொட்டி நிருவாகம் மேற்கொள்ளப்படுமானால், அரசுடைமையாக்கிய முயற்சி வெற்றி தருவதற்கு மாறாக — எதிர்ப்பாளர்களின் குரல் வெற்றி பெறத்தான் வழி வகுக்கும் என்பதனை மத்திய அரசு நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும். இதுதொடர்பான தீவிர சிந்தனைகளை மேற்கொண்டு சீரிய வகையில் செயல்படுவதற்கான கால அவகாசம்தான் நீதி மன்றத்தின் இடைக்காலத் தடை என்று கருதிச் செயல்படவேண்டும்.

எந்தக் காரணத்துக்காக அரசுடைமையாக்கப்பட்டது என்று அறிவிக்கப்பெற்றுள்ளதோ, அந்தக் காரணம் வெற்றிபெற வேண்டுமானால், நிர்வாகத்தை சீர்மையுடையதாக, சிறப்புடையதாக, சிக்கனமுடையதாக அமைக்கவேண்டும்! அவ்வாறு நடைபெறவில்லையானால், இப்போதே சொல்லிவிடலாம், மொரார்ஜியை வெற்றி கண்டதாக இது ஆகாது; மாறாக மொரார்ஜி வெற்றிபெற்றார் என்றுதான் சொல்லவேண்டியிருக்கும். சோஷலிசப் படி, தடம் புரண்டுவிடக் கூடாது!

அன்புள்ள,

**திருவாரூர் முத்துராமன்**

# வினா-விடை

எஸ். சுந்தர்ராசன், விருதுநகர்.

நிலாத் தடத்தில் பதித்த மனிதனின் அடிச்சுவடு எவ்வளவு காலத்துக்கு இருக்கும்?

சுமார் 5 லட்சம் ஆண்டுகளுக்கு இருக்கக்கூடும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்.

எஸ். பிரேமா, காஞ்சிபுரம்.

பெண்கள் விரும்பிப் படிக்கும்படியாக 'காஞ்சி'யில் தனிப் பகுதி தொடங்கப்படுமா?

சுவையான பல பகுதிகளுடன், விரைவில் காஞ்சி புதியமாற்றம் பெறும்; பொறுத்திருங்கள்.

கே. குப்புசாமி, பழநி.

குடியரசுத்தலைவராகும் வாய்ப்பு யாருக்கு அதிகம் இருக்கிறது?

எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டு செயல்பட்டால் நிச்சயம் வி. வி. கிரிக்கே அந்த வாய்ப்பு அதிகமிருக்கும்.

பி. எல்லார், சென்னை.

காமராசர்—இந்திராகாந்தி மீது கல்கத்தா வாசி ஒருவர் வழக்குத் தொடுத்திருப்பதாகக்கூறப்படுவது உண்மையா?

ஆமாம்! டில்லி அ. இ. கா. க. அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த சுனில் ரஞ்சன் தாஸ் என்பவரை வேலை நீக்கம் செய்துவிட்டதால் அவர், 1967ல் காங்கிரசுத்தலைவராகவிருந்த காமராசர் மீதும், பிரதமர் இந்திரா மீதும், நிதியமைச்சராகவிருந்த மொரார்ஜி தேசாய்மீதும் வேறு பதினான்கு பேர் மீதும் வழக்குப் போட்டிருக்கிறார்.

ஏ. பொன்னுசாமி, கள்ளக்குறிச்சி.

கடத்தல் வேலையில் ஈடுபட்டுள்ள லாரிகள், வாகனங்கள் அனைத்தும் கைப்பற்றப்படுகின்றனவா?

சில இடங்களில் கைப்பற்றுகிறார்கள். சில இடங்களில் விட்டுவிடுகிறார்கள், வேறு சில இடங்களில் கைப்பற்றி, பிறகு திருப்பிக் கொடுத்துவிடுகிறார்கள். 'பறிமுதல்' செய்யப்படும் வரையில் கடத்தல் நிற்காது.

மணவாளன், மாணம்பதி

மத்திய அரசின் அழைப்பை கேரள முதல்வர் உதாசீனப்படுத்தியது எதைக் காட்டுகிறது?

'நாம் யார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்' என்பதைக் காட்டுகிறதோ!

எம். கே. சுந்தரம், திருவாரூர்

பாங்குகளை நாட்டுடைமையாக்கி அறிவித்த அவசரச் சட்டத்துக்கு தடையுத்தரவு போட்டு மூன்று கட்டளைகளையும் பிறப்பித்திருக்கிறதே நீதி மன்றம்–அப்படியானால் சட்டம் செயல்படாதா?

பாங்குகளின் அதிகாரங்களும், முதலீடுகளும் அரசாங்கத்துக்குரியதாகவே இருக்கும்; அதுபோல் டைரக்டர்கள் போர்டு கலைக்கப்பட்டதாகவே கருதப்படும் என்று பிரதமர் நாடாளுமன்றத்திலேயே தெரிவித்திருக்கிறாரே!

குமாரசாமி, திருப்பூர்.

இப்போது மனிதர்களிடத்தில் கருணை என்பது காணப்படுகிறதா?

பணப் பசியும், பொருள் வறுமையும் ஏற்பட்டிருக்கும் மனிதனிடம் கருணையை எதிர்பார்க்க முடியுமா?

தமிழொளி, பெங்களூர்.

கர்னாடக மாநில தி. மு. க. தமிழகத்துக்குக் கட்டுப்பட்டதா?

ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்ளாத வரையில் சுதந்திரமானதேயாகும்,

பி. கருணாநிதி, குன்றத்தூர்.

எக்ஸ்பிரஸ் ரெயில்களின் கூட்டத்தைத் தவிர்க்க வழியே இல்லையா?

இருக்கின்ற ஏழெட்டுப் பெட்டிகளில் உயர் வகுப்புக்கென்று இரண்டு மூன்று; சரக்குகளுக்கென்று இரண்டு மூன்று; அஞ்சல் துறைக்கென்று ஒன்று, ரிசர்வேஷனுக்கென்று இரண்டு மூன்று என்று ஒதுக்கிவிட்ட பின்னர் மூன்றாம்வகுப்பு உதிரிப் பயணிக்கு ஏதையா இடம்?

ஐ. உலகுதாசன், கரூர்.

விண்வெளியிலிருந்து உண வருந்தும்போது உடல் நிலை பாதிக்கப்படுமா?

கொஞ்சநாள் பொறுத்திருங்கள்—ஆம்ஸ்ட்ராங்கும், ஆல்டிரினும் பதிலளிப்பார்கள்! ஆனால் பாதிக்கும் என்றால் அவர்களை அனுப்பியவர்கள் அப்படி உண வருந்தும் ஏற்பாட்டைச் செய்திருக்கமாட்டார்கள்.

குமரதாசன், கடலாடி.

செஞ்சீனா இருக்கிறதா?

அப்பாலோ 11ஐப் பொறுத்தமட்டில் அது எந்த உலகில் இருக்கிறது என்பதே தெரியவில்லை ஐயா!

சிவனேஸ்வரி, சென்னை,

நிலாத்தடத்தில் சுவடு பதித்து வந்தவர்களுக்காக நிமிடத்துக்கு 112 கோடி செலவு என்பது எப்படி?

இதுவரையில் இந்த முயற்சிக்காகச் செலவிட்ட 18,000 கோடியையும், அவர்கள் நிலா மீது கழித்த நேரத்தின் மீது கணக்கிட்டு அப்படிக் கூறி இருக்கிறார்கள்.

வெ. அறிவழகன். தக்கோலம்.

அம்புலிப் பயணத்தால் அகிலம் அறியப் போவதென்ன?

நிலாவில் உயிரினங்கள் இருக்கின்றனவா? நிலாவின் வயதென்ன? அது எப்படித் தோன்றியது? நிலாத் தரைக்கும், பூமியின் தரைக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமை, அதிர்ச்சி பூகம்பம் முதலானவை அங்குண்டா? எரிமலைகள் இன்னும் உள்ளனவா? வலிமை குன்றிவிட்டனவா? என்பன போன்றவற்றைத் தெளிவுபடுத்திக் கொள்வதே அம்புலிப் பயணத்தின் பயனாகும்.

# Kamala Sugar Mills Ltd.,

(GLUCOSE FACTORY)

**Amaravathi Nagar (P. O.)**
**Udumalpet S. Rly.,**
Coimbatore Dt.

★

## Liquid Glucose "Grade-A"

**Now we have started production of our New Glucose "Grade-A" This Glucose is purified by "Demineraliser" which gives good colour and avoids stickness.**

**So it will be a great advantage to the consumers of glucose liquid for the manufacture of confectionary Sweets, Biscuits, Syrups Aerated waters and Pharmaceuticals.**

Our Distributors for Madras, South Arcot
North Arcot and Chingleput Districts:

**P. Singaravelu,**
**310, Wall Tax Road, Madras-3**

OUR SALES BRANCHES AT:

**MADURAI: 28-B, ELUKADAL AGRAHARAM.**
**TRICHY: 9, CHINNAKKADAI STREET.**
**KUMBAKONAM: 84, J. P. KOIL EAST STREET.**

சிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
36. திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.